
# விடுதலைப்புலிகள்

குரல் 86 ஐப்பசி - கார்த்திகை 1998 அன்பளிப்பு 6/-



# ஓயாத அலைகள் - II



UNCEASING WAVES-II

## தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

Liberation Tigers Of TAMIL EELAM
புலிகளின் குரல்

# சமாதானத் தேவதையின் சாயம் வெளுக்கிறது

தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளை மதித்து - அமைதி வழியில் - தமிழரின் இனப்பிரச்சனையை சந்திரிகா அம்மையார் தீர்த்து வைப்பார் என்று நம்பும் எதுநிலைகள் உள்ளனவா?

இல்லை... இல்லை... இல்லவே இல்லை. கடந்த நான்குவருட அம்மையாரின் ஆட்சி இந்தப்பதிலைத்தான் வலியுறுத்திக் கூறவைக்கின்றது.

''ஜே ஆர். ஜெயவர்த்தனா ஒரு உண்மையான பௌத்தனாக இருந்திருந்தால் நான் ஆயுதம் ஏந்தவேண்டி வந்திருக்காது'' என்பது தலைவர் பிரபாகரனின் புகழ்பூத்த அரசியல் வாக்கியம். இது சந்திரிகா அம்மையாருக்கும் மிகப் பொருத்தமானதே ஆகும்.

தமிழ்மக்களுக்கெதிரான வெறுப்புணர்வை பகிரங்கமாகவே சொல்லிக்காட்டி - தனது இனவெறியை செயலில் செய்த வெளிப்படையான பேரினவாதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா.

ஆனால், ஜனநாயகவாதிபோல பேசியும் - மனிதாபிமானிபோல காட்டியும் - இனவரம்பு கடந்த அரசியல் ஞானிபோல நடித்தும் - தனது பேரினவாதச் செயற்பாட்டை திரை போட்டு மறைத்துவரும் சாணக்கியப் பேரினவாதி சந்திரிகா அம்மையார்.

ஆயினும், அம்மையாரின் சாணக்கியத்தனமான வெளிச் செயற்பாடுகளையும் மேவிக்கொண்டு, அவரது பேரினவாத இதயத்தின் தமிழின விரோதக் குரல், அவ்வப்போது வெளிவந்துகொண்டேயிருக்கின்றது.

அண்மையில், அணிசேரா நாடுகளின் மாநாட்டிற்காக தென்னாபிரிக்கா சென்ற அம்மையார் - அந்த நாட்டின் தொலைக்காட்சி நிலையம் ஒன்றிற்கு செவ்வி கொடுத்தபோது ஈழத்தமிழர்கள் இலங்கையின் பூர்வீகக்குடிகள் அல்ல; அவர்கள் வந்தேறு குடிகள் என்று கருத்துரைத்துள்ளார். அவரின் இந்தக்கருத்து பல்வேறு அரசியல் வியாக்கியானங்களைக் கொண்டது.

அதாவது, வந்தேறுகுடிகளுக்கு தேசிய இன அந்தஸ்தோ! அதற்குரிய அரசியல் அபிலாசைகளோ இருக்கமுடியாது. பாரம்பரிய தாயக பூமி என்ற நில உரிமை இருக்கமுடியாது. தேசிய தனித்துவங்கள் என்ற பண்புகள் அதற்கு இருக்கமுடியாது. அரசியல் சுதந்திரத்தைக் கோரும் அருகதையும் அதற்கு கிடையாது.

அம்மையாரின் தீர்வுப்பொதியும் இவற்றைத்தான் சுற்றி வளைத்து சூட்சுமமான முறைகளில் சொல்லியுள்ளது.

தமிழரின் தேசியதனித்துவங்களை இல்லாதுசெய்து- அவர்களை அரசியல் அநாதைகள் ஆக்கும் ஒரு சூழ்ச்சிப்பொறி தான் அம்மையாரின் தீர்வுப்பொதி என்று புலிகள் இயக்கம் பலதடவைகள் வலியுறுத்திக் கூறிவிட்டது.

புலிகள் கூறிவந்ததை நிரூபிக்கும்வகையில் அம்மையாரின் தென்னாபிரிக்கச் செவ்வி அமைந்துவிட்டது.

செம்மணிப்புதைகுழியை அம்பலப்படுத்திய கொலைஞன் சோமரட்ண ராஜபக்ஷவுக்கு தமிழினம் நன்றிகூற வரும் புவதுபோல, தனது மனக்குழக்குள் ஒளிந்திருந்த தம்மதீபசிந்தனையை தானே வெளியில் காட்டிய சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக்காவுக்கும் நன்றி கூற உரித்தாகட்டும். சிங்கள -பௌத்தருக்கு மட்டுமே இலங்கைத்தீவு சொந்தமானது, வேறு எவர்க்குமே அல்ல என்பதே தம்மதீப கோட்பாட்டின் சாரம். பேரினவாதிகளின் அரசியல் சித்தாந்தமும் அதுதான்.

விஜயனின் வருகையுடன் சிங்களவரின் வரலாற்றைக்கூறும் மகாவம்சமே, அவனின் வருகையின்போது இலங்கைத்தீவில் இருந்த பூர்வீகக்குடிகள் பற்றிய உண்மையைக் கூறியுள்ளது. ஆதித்திராவிடர்களான அந்தப் பூர்வீகக் குடிகளின் இருப்பை மறுதலித்து அவர்களின் வழித்தோன்றல்களான ஈழத்தமிழர்களை வந்தேறு குடிகள் என வகைப்படுத்திய- அம்மையார் - வரலாற்றையே திரித்துள்ளார்.

இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கு பகுதிகள் இணைந்த நிலப்பரப்பு ஈழத்தமிழர்களின் வரலாற்றுவாழிடம் - அவர்களின் தாயகபூமி - அவர்களுடைய தேசம், இந்த தாயகநிலத்தில் - தமிழ் மக்கள் - சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும், பொருண்மிய சுபீட்சத்துடனும் வாழ வேண்டும் என்பதற்காகவே இந்த விடுதலைப்போராட்டம் நடைபெறுகின்றது.

இந்த அரசியல் விடுதலையை அகிம்சைவழிப்போராட்ட வழுமுறைக்கூடாக அடைவது சாத்தியமல்ல என்பதை அனுபவவாயிலாக பட்டறிந்தபின்பே வன்முறைவடிவிலான ஆயுதப்போராட்டத்தை புலிகள் இயக்கம் முன்னெடுத்திருந்தது.

தமிழர்கள் இலங்கைத்தீவின் பூர்வீகக்குடிகள் அல்ல; அவர்கள் வந்தேறுகுடிகள் என்ற சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் பிரகடனம்,புலிகளின் ஆயுதப்போராட்ட அரசியலை நியாயப்படுத்தியுள்ள ஆகப்பிந்திய உதாரணமாகும்.

22 வருட பழமைவாய்ந்த புலிகளின் ஆயுதப்போராட்ட அரசியல் நிலைப்பாடு ஒரு தீர்க்கதரிசனமான முடிவு என்பதை மனப்பூர்வமாக ஏற்று - போராட்டத்துடன் தங்களை இணைத்துக்கொள்ளும் தமிழ்மக்களின் எண்ணிக்கை, வருடா வருடம் உயர்ந்து செல்கின்றது.

அரசியல் பேச்சுவார்த்தைகள்மூலம் தமிழரின் இனப்பிரச்சனையை தீர்க்கக்கூடிய சிங்களத்தலைவர் என்று நம்ப வைக்கப்பட்ட சந்திரிகா அம்மையார் -

தனது அரசியல் மனதைத் திறந்து காட்டி- தமிழரை வந்தேறுகுடிகள் என முத்திரை குத்தியபின்னும், அவர் ஈழத்தமிழரின் அரசியல் அபிலாசைகளை வழங்குவார் என்று தமிழினம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கலாமா!

இல்லை... அது நடைபெறாது.

தமிழ்மக்கள் தமது விடுதலையை தாமே போராடிப்பெற வேண்டும். சிங்கள ஆட்சியாளர்கள் சும்மாகொடுக்க மாட்டார்கள்.

போராடி எடுத்தல் என்ற செய்கை தமிழினத்தின் இராணுவபலத்திலேயே தங்கயுள்ளது. அதாவது, தமிழரின் இராணுவசேனையான புலிகள இயக்கத்தின படைபல வளர்ச்சியிலேயே தமிழ் மக்களின் அரசியல்விடுதலை தங்கியுள்ளது.

இந்த விடுதலைக்கருத்து நடைமுறை உண்மையாக மாறிவருவதைக் கோடி காட்டியுள்ள ஆகப்பிந்திய உதாரணம் ஓயாதஅலைகள் -02 ஆகும். ○

## செம்மணியின் செய்தி சிறிய ஒரு முன்னுரையே

யாழ்ப்பாண வாயாய்
இலங்குகின்ற செம்மணியின்
நாப்போல நீண்டிருக்கும்
நல்ல பெருந்தெருவே !
வீதிசெலும் வெல்லாம்
விரிந்த பெருவெளியில்
ஆதியாய் வந்த வடுகாடே !
அக்காட்டில் -
உப்பளத்தில் - சேற்றில்
உலாவிப் புலால்மணக்க
ஊதுகின்ற காற்றே ! நீர்
உண்மை உரைப்பீரே !

செம்மணியில் சிங்களவர்
கொன்று புதைத்த எங்கள்
கண்மணிகள் எத்தனைபேர் ?
காணாமல் போனவருள்
அம்மணமாய் ஆக்கிப்பின்
கற்பழித்துக் கொன்ற இளம்
பெண்மணிகள் எத்தனைபேர் ?
பள்ளிசெல்லும் பிள்ளைகள்
எத்தனைபேர் ? சொல்லுங்கள் !
பேயுன்ன விட்டுவிட்டுப்
பித்தாய் அலைகின்ற
பெற்றவர்க்குச் சொல்லுங்கள் !

பேரொலேங்கா மண்ணில்
"புகல்" தேடிப் போனவரை
"யாரொடு நோவோம்நாம் ?
யார்க்கிங் குரைப்போம் ?"
எலிபோல இருந்த
இளையவரைப் பற்றிப்
புலியெனச் சுட்டுப்
புதைத்தனராம் !... ஓ ஓ
உடலைப் புதைத்திடலாம்
உண்மைபுதை யாதே !
முடிவிலுண்மை சாவாது -
முச்சுவிடும்; ஓங்கிவரும் !

வாழி "கிரிசாந்தி" நல்பெயரே !
உண்மையை,
ஆழி உலகறிதற் (கு)
ஆவி கொடுத்தவளாம் !
ஊழி கடந்தும்
உலவுகின்ற வன்காற்றே !
ஞாலம் விளக்கி
ஒளிர்கின்ற நற்கதிரே !
ஏவலினால் கொன்றதுவும்
ஆவியின்றித் தந்தபல
பூவுடலை மண்ணில் புதைத்ததுவும்
தானுந்தான்
என்றுமன்றிற் சொன்ன
"சதராஸி" மெய்யுரைக்கு
நன்றுவந்து சான்று நவிலுங்கள் !
வாழ்த்திடுவோம் !

பேயரசு செய்யப்
பிணந்தின்ன வந்திட்ட
நாய்களே ! செம்மணியில் -
நளவிரவில் தோண்டுகிறீர் !
தோண்டி எடுக்கத்
தொலையுமோ பாவங்கள் ?
மீண்டும் பிடிக்குமவை !
வெய்ய படஅரவு
தீண்டுமுறை ! செய்கின்ற
தீவினைகள், நீசெல்லாம்
யாண்டு செலினும்
விடாது தொடருமே!

செம்மணியின் செய்தி
சிறியவொரு முன்னுரையே !
எம்மன் வரலாற்றில்
இன்னும் குழிகளுண்டு !
எல்லாம் வெளியாகும்
ஈழம் விடியுமந்நாள்
நல்லநாள் ஆகும் நமக்கு !

- வி. பரந்தாமன்



www.eelamview.com

கிளிநொச்சி – பரந்தன் – ஆனையிறவு – வெற்றிலைக்கேணி இராணுவக் கூட்டுத்தளம் (MILITARY COMPLEX) வடபுலத்தின் மிகப் பலமான படைத்தளம். அத்துடன், குடாநாட்டில் நிலைகொண்டுள்ள முப்பதினாயிரம் படையினரை வன்னிப் பெருநிலப்பரப்புடன் இணைத்துவிடும் ஒரு இராணுவப்பாலமாகவும் இந்தக் கூட்டுத்தளம் செயற்படுகின்றது.

இந்தக் கூட்டுத்தளத்தில் சிங்களத்தின் 54வது படையணி (DEVISON) நிலைகொண்டுள்ளது. மேஜர் ஜெனரல் லோகான் குணவர்த்தனாவை தலைமை அதிகாரியாகக் கொண்ட இந்த டிவிசனின் தலைமையகம் ஆனையிறவில் அமைக்கப்பட்டுள்ளது.

சிங்களப்படையைப் பொறுத்தளவில் ஒரு டிவிசன் என்பது சுமார் பத்தாயிரம் படையாட்களைக் கொண்டது. ஆனால், இந்த சிறப்பு டிவிசன் வழமையைவிட அதிகளவு சிப்பாய்களைக்கொண்டு ஆக்கப்பட்டுள்ளது. அதுவும், சண்டை அனுபவம் வாய்ந்த துருப்பினரே 54வது டிவிசனில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாபெரும் கூட்டுத்தளம் முப்பெரும் பகுதிகளாக இயங்கியது.

(1) கிளிநொச்சி இராணுவத்தளம்
(2) பரந்தன் – ஆனையிறவு இராணுவத்தளம்
(3) இயக்கச்சி – வெற்றிலைக்கேணி தளம்

ஒவ்வொரு தளமும் ஒவ்வொரு பிரிகேட் படையணியால் ஒவ்வொரு பிரிகேடியர் தலைமையில் நிர்வகிக்கப்படுகின்றது. இதேவேளை, ஆட்டிலறி பிரிகேட், இஞ்சினியரிங் பிரிகேட் என்று துணைபிரிகேட்டுகளும் அதற்குரித்தான பிரிகேடியர்களின் தலைமையில் உள்ளன.



ஆளிபறித்து கொழுத்திருந்த படைத்தளத்தை தவிப்பிடிக்கும்' வகைசொல்லும்' தலைவன்

# கிளிநொச்சிப்படைத்தளம் வயல்சூழ்ந்த கட்டடக்காடு

முப்பெரும் பகுதிகளில் முதற்பெரும் தளமாக கிளிநொச்சி தளமே இருந்தது. ஆட்தொகையைப் பொறுத்த வகையிலும் – காப்பரண்களின் வலுவைப் பொறுத்த வகையிலும் – போர் அனுபவம் வாய்ந்த சிப்பாய்களைப் பொறுத்த வகையிலும் கிளிநொச்சித்தளம் வலிமை மிகுந்ததாகவே இருந்தது.

54வது டிவிசனிலுள்ள மூன்றாவது பிரிகேட் (543 பிரிகேட்) கிளிநொச்சிப் படைத்தளத்தில் நிலைகொண்டிருந்தது. கிளிநொச்சி பிரிகேட்டின் பிரிகேடியராக உபாலி எதிரிசிங்க பணியாற்றியிருந்தார்.

தாக்குதலுக்குள்ளானபோது இருந்த கிளிநொச்சித்தளம் ஏறக்குறைய 04 கிலோ மீற்றர் நீளத்தையும் 05 கிலோமீற்றர் அகலத்தையும் கொண்ட சுமார் 20 சதுர கிலோமீற்றர் பரப்பளவுள்ள பகுதியாக இருந்தது.

சண்டை அனுபவமிக்க நான்கு பற்றாலியன்களால் கிளிநொச்சி பிரிகேட் அமைக்கப்பட்டிருந்தது. ஒரு பற்றாலியன் என்பது ஐந்நூறு அல்லது அறுநூறு சிப்பாய்களைக் கொண்டது.

☆ பத்தாவது சிங்க றெஜிமென்ற் (10 S.R) ஆறாம்வாய்க்கால் பகுதியிலும்,

☆ நான்காவது சிங்க றெஜிமென்ற் (04.S.R) கணேசபுரப் பகுதியிலும்,

☆ ஆறாவது கெமுனு வோச் (06.G.W) பிரதான பாதையோரப் பகுதியிலும்,

★ ஏழாவது கெமுனு வோச் (07.G.W) திருவையாறு பகுதியிலும் நிலைகொண்டிருந்தன.

இதேவேளை, எமது தாக்குதல் வியூகத்திற்குள் பரந்தன் – ஆனையிறவு பிரிகேட்டின் இரண்டு பற்றாலியன்களும் அடங்கியிருந்தன.

☆ ஒன்பதாவது கெமுனு வோச் (09.G.W) மூன்றாம் வாய்க்கால் பகுதியிலும்,

☆ ஏழாவது ஸ்ரீலங்கா காலாட்படை (07.S.L.T) கரடிப்போக்கு மேற்குப் பகுதியிலும் நிலைகொண்டிருந்தன.

மக்கள் வங்கிக் கட்டடத்திற்கு அருகாமையிலுள்ள பகுதியில் கிளிநொச்சி பிரிகேட்டின் தலைமையகம் அமைக்கப்பட்டிருந்தது.

ஒட்டுமொத்தமாக கிளிநொச்சிப் படைத்தளம் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட படையினரைக் கொண்டிருந்தது.

வயலும் – வயல்சார்ந்த நிலத்தாலும் சூழப்பட்டுக்கிடக்கும் ஒரு கட்டடக்காடுதான் கிளிநொச்சித்தளம். தளத்தின் தற்காப்பிற்கு இந்த புவியியல் அமைப்பு பலமான முற்பாதுகாப்பாக விளங்கியது.

இந்த இயற்கை அரணையும் சேர்த்து தளத்திற்கு வெளியேயும் – உள்ளேயுமாக படிப்படியான நான்கு கட்டங்களைக் கொண்ட தற்காப்பு ஏற்பாடுகளை படையினர் செய்து வைத்திருந்தனர்.


(01) தளப்பகுதிக்கு வெளியே – தளத்தைச்சூழ கண்ணுக்குப் புலப்படாத ஒரு கண்காணிப்பு அமைப்பைப் படையினர் செய்து வைத்திருந்தனர். கண்காணிப்பு நிலைகள் (LISTENING POST), அவதானிப்புக் கோபுரங்கள் (OBSERVATION POST) என்று அழைக்கப்படும் உருமறைக்கப்பட்ட நிலைகளில் இருந்தவாறு புலிகளின் நகர்வை தளத்திற்கு அறிவித்து – எச்சரிக்கை செய்யும் ஒற்றர்கள் போல இந்த நிலைகள் இருக்கும். புலிகளின் வேவு வீரர்களை தாக்கிக் கொல்லவும் இவை முனையும். இதேவேளை இந்தப்பகுதியில் பதுங்கித்தாக்கும் அணிகளையும் பகைவன் உலாவவிடுவான். அதேசமயம், தேவை ஏற்படும் இடங்களில் நிலக்கண்ணிகளையும் புதைத்து – காவல் செய்வான். இந்த முதலாவது பாதுகாப்பு ஏற்பாட்டின் பிரதான நோக்கம், தளம் மீதான தாக்குதலை முன்னரே அறிவிப்பதும் – தாக்க நகரும் புலி அணிகளை வழி மறித்துத்தாக்கி தாக்குதல் திட்டத்தை சிதைத்துவிடுவதுமாகும்.

20 கிலோமீற்றர் பரப்பளவுள்ள தளத்தைச் சுற்றிச் – சூழ அமைக்கப்பட்டுள்ள இரண்டாவது பாதுகாப்பு வேலி, முன்னணிப்பாதுகாப்பு அரண்கள் எனப்படும். 25 அல்லது 30 மீற்றர்களுக்கு ஒரு காவல் அரண் என்ற ரீதியில் 500 ற்கும் மேற்பட்ட காவல் நிலையங்களைக் கொண்டதாக இந்த முன்னணிப் பாதுகாப்பு அரணின் அமைப்பு இருந்தது. மண் அணைகளாலும் – முட்கம்பிச்சுருள்களாலும் – கண்ணிவெடிகளாலும் இந்த பாதுகாப்பு வேலி அரண் செய்யப்பட்டிருந்தது.

(03) மூன்றாவது கட்ட பாதுகாப்பு ஏற்பாடான பலமான நிலைகள் என படையினர் அழைக்கின்றனர். பெயர் சூட்டலுக்கேற்றாற்போல் இந்தக் காப்புவேலி வலிமையானதாகவும் – அதி உயர் விழிப்புநிலையிலும் இருக்கும். இந்தப் பாதுகாப்பு →



www.eelamview.com




**சிங்களத்தின் முதல்தர (A1) இராணுவத்தளங்களில் ஒன்றான கிளிநொச்சிப் பெருந்தளத்தின் மாதிரித் தோற்றம்.**

ஏற்பாட்டுடனேயே தளத்தின் பெரும்பாலான மினிமுகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு முகாம் அணிகளினதும் - சிறப்புக்கொமாண்டோக்களினதும் தலைமையகங்கள் மினி முகாம்களாகவும் செயற்படும். மொத்தம் 16 மினிமுகாம்கள் கிளிநொச்சித் தளத்திலிருந்தன. இந்த மூன்றாவது கட்ட பாதுகாப்பு வேலியை வெற்றிகொண்டால்தான் தளத்தின் மையப்பகுதியை அடையலாம்.

(04) நான்காவது பாதுகாப்பு ஏற்பாட்டை ஆழமான நிலைகள் என்று படையினர் பெயரிட்டழைக்கின்றனர். இந்த ஆழமான நிலைக்குள்ளேயே தளத்தின் பிரதான முகாம் உள்ளது. அத்துடன், பற்றாலியன் தலைமையகமும் - கட்டளைமையமும் - ஆயுதக்களஞ்சியமும் - மோட்டார் ஏவுதளமும் இந்தப் பகுதியில் உள்ளது. அதாவது, தளத்தின் இதயப் பகுதி இந்த ஆழமான நிலைகள் என்ற பாதுகாப்பு அமைப்பால் காவல்காக்கப்படுகின்றது. இந்தப் பாதுகாப்பு நிலைகள் வெற்றி கொள்ளப்படும் வரை தளம் கட்டமைப்புடன் செயற்பட்டுக்கொண்டிருக்கும். இந்தப் பாதுகாப்பு வேலியை உடைத்து - உள்நுழைந்து தாக்கி - சேதத்தை விளைவிக்கும்போதே தளம் மரணப்படுக்கைக்குச் செல்லும்.

தளத்தில் நிலைகொண்டிருந்த ஒவ்வொரு பற்றாலியனும் மோட்டார் அணிகளைக் கொண்டிருந்தன. 120 மில்லிமீற்றர் மோட்டார்களும் - 81 மில்லிமீற்றர் மோட்டார்களும் இதில் குறிப்பிடக்கூடியவை. ஆட்டிலறித் தளம், ஆனையிறவு மற்றும் இயக்கச்சிப்பகுதியில் அமைந்திருந்தது. இந்த ஏவுதளங்களிலிருந்து கிளிநொச்சி பிரிகேட் விரும்புகிற வகையில் ஆட்டிலறித்தாக்குதலை நிகழ்த்தமுடியும். தளத்தினுள்ளே பலவகையான கவசவாகனங்களும் - 50 கலிபர் துப்பாக்கிகள் மற்றும் ஆர் . பி . ஜீகள் உட்பட பல்வேறு வகையான இயந்திரத்துப்பாக்கிகளும் தளத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியிருந்தன. இவற்றுடன், 'கிபிர்' குண்டு வீச்சு விமானங்களும் தளத்தின் பாதுகாப்பை நிச்சயப்படுத்தின.

கிளிநொச்சித்தளம் ஒரு பிரிகேட் படையினரைக் கொண்டிருந்தாலும், ஒரு டிவிசன் படையணியைக் கொண்டிருந்த பாரிய கூட்டுப்படைத்தளத்தின் - பிரிக்கமுடியாத - ஒரு பகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சிப்படைத்தளம் மீதான தாக்குதல் என்பது குறித்த ஒரு டிவிசன் படையாட்களுக்கும் - அதன் படைத்தளபாடங்களுக்கும் எதிரான ஒரு சண்டை என்பதும் குறிப்பிடத்தக்கது.

வவுனியாவிலிருந்து குடாநாட்டிற்கு ஒரு இராணுவப்பாதை அமைத்துக்கொண்டுவர முயலும் 'ஜயசிக்குறுய்' படை நடவடிக்கைக்கு கிளிநொச்சிப் படைத்தளம் ஒரு பலமான - கேந்திர மையமாகவே இருந்தது.

அத்துடன் தற்காப்புப்போர் ஒன்றை (DEFENSIVE) நடாத்துவதற்கேற்ற அனைத்துவகை சாதக அம்சங்களையும் கிளிநொச்சிப் படைத்தளம் தன்னகத்தே வைத்திருந்தது.

வெட்டவெளிகளால் சூழப்பட்ட சீமெந்துக்கட்டடங்கள், படையினர்க்கு இயல்பாகவே கிடைத்த பதுங்குகுழிகளாகவும்- அரண்களாகவும் அமைந்துகிடந்தன.

இரணைமடுக்குளத்தின் பாசனநிலங்களில் பெரும் பகுதியை தனது ஆதிக்கத்திற்குள் வைத்திருந்த கிளிநொச்சித்தளம் வன்னியின் உணவு உற்பத்தியையும் கணிசமாகப் பாதித்தபடியே இருந்தது.

ஏற்கனவே இரண்டுதடவைகள் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானதால் அதி உயர் விழிப்புநிலையுடன் கூடிய உச்சப்பாதுகாப்பை கிளிநொச்சித்தளம் கொண்டிருந்தது.

இத்தகைய உயர்பாதுகாப்பையும் - கேந்திர முக்கியத்துவத்தையும் கொண்டிருந்த கிளிநொச்சிப் படைத்தளத்தை தாக்கித் - துடைத்தெறியும் இலக்குடன், தலைவர் பிரபாகரன் அவர்கள், ஓயாத அலைகள் - 02 தாக்குதல் நடவடிக்கையை 26ம் திகதி (ஒக்டோபர் மாதம்) தொடுத்திருந்தார். O



www.eelamview.com

# பகைத்தளம் பலியான கதை

திபாகி திலீபனின் பதினோராவது நினைவு நாளை மக்கள் உணர்வெழுச்சியுடன் கொண்டாடி - நிறைவுசெய்து - விடுதிரும்பிய வேளை, புலிவீரர்கள் ஒருபெரும் வலிந்த தாக்குதலுக்காக கிளிநொச்சித் தளத்தை நோக்கி நகரத் தயாராகிக் கொண்டிருந்தனர்.

கிளிநொச்சியை மீட்டெடுப்பது என்ற உறுதியுடன் - தலைவர் பிரபாகரன் - தாக்குதலை வழி நடாத்த ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தார்.

நேர்த்தியானபணி நகர்வுச் சமரில் புலிகளுக்கு முழு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது. இனி, பகைவரண்கள் மீது பாய்ந்து ஒரு திடீர் தாக்குதலைத் தொடுக்க வேண்டியதுதான்.

26. 09. 98 அன்று நள்ளிரவு தாண்டிய பின்னிரவு நேரம் 1. 20 மணிக்கு தாக்குதல் ஆணை வான் அலைகளூடு பரிமாறப்பட்டது.

பகைவனின் முன்னரங்கநிலைகள் மீது ஒரு மின்னல்வேகத் தாக்குதலை புலி அணிகள் தொடுத்தன. திகைப்பூட்டும் இந்த அதிரடித்தாக்குதலின் விளைவாக முன்னரங்கநிலைகள் புலிகளிடம் வீழ்ந்தன.

ஆனையிறவுத்தளத்திலிருந்த பகைவனின் ஆட்லறித் தளமும் தாக்கிலக்காகியது. அங்கிருந்த வெடிமருந்துக் களஞ்சியம் அடிபட்டு- வெடித்துச்சிதறி- விடியவிடிய எரிந்தது. அருகிலிருந்த ஆட்லறிகள் சேதமடைந்தன. ஆனையிறவு ஆட்டிலறித்தளம் செயலிழந்தது.

இத்துடன், கிளிநொச்சித்தளத்திலிருந்த படையினரின் 120 மி.மீற்றர் மோட்டார்களும் புலிகளின் பீரங்கிப்படையணியின் குறியிலக்காகியது. !"புலிகள்

தாக்குதல் தீவிரம் பெற்றதும் முன்னரங்க காவல் சிப்பாய்கள் பின்வாங்கி- இரண்டாவது பாதுகாப்பு வேலி நோக்கி ஓடி விட்டதே அதற்குக் காரணம்.

விடியத்தொடங்கியதும் இழந்த முன்னரங்க அரண்களை மீண்டும் கைப்பற்ற பகைவனின் அணிகள் பகீரத முயற்சி செய்தன. சில அரண்களை பகைப்படை மீளப் பிடித்துக்கொண்டது.

எனினும், மேலும் சிலமணி நேர தீவிரச் சண்டையைத் தொடர்ந்து படையினர் மீளப்பிடித்த நிலைகளை, புலிகள் மீண்டும் கைப்பற்றினர். ஆனாலும், தொடர்ந்து நடந்த சண்டையில் சில அரண்களை படையினர் திரும்பவும் பிடித்தனர். விடாப்பிடியானதும் தீவிரமானதுமான செயற்பாடுகளினால் இழந்த நிலைகளை - புலிகள் - மீண்டும் பறித்தெடுத்தனர்.

இவ்விதம், இரண்டு - மூன்று முறைகள் இருபகுதியினரிடையேயும் கைமாறிய இந்த இழுபறிச்சண்டைகள் இருபத்தி யேழ மதிகதி விடியற்காலை ஐந்து மணியிலிருந்து மாலை வரை தொடர்ந்தது. இதனுடன் புலிகளின் முதற்கட்டத்தாக்குதல் முற்றுப்பெற்றது.

இந்த முதற்கட்டத் தாக்குதலின் மனதைவிட்டகலாத தியாகச் செயல்களும் அரங்கேறியிருந்தன.

நித்திரையற்ற பலஇரவுகளில்- நட்சத்திர வெளிச்சத்தில்- வேவுப்புலிகள் வேலைசெய்து - எழுதிக்கொடுத்த பகைத்தளத்தை நோக்கிய நகர்வு வரைபடத்தை அடியொற்றி தாக்குதலணிகள் நடக்கத்தொடங்கின.

16 கிலோ மீற்றர்கள் சுற்று வட்டத்தைக்கொண்ட கிளிநொச்சித்தளத்தின் முன்னரங்க காவல் அரண்களில் பெரும் பகுதியை - சமவேளையில் - தாக்கிக் கைப்பற்றும் பாரிய இலக்குடன் புலி அணிகள், வேவுவீரர்களின் வழிநடாத்தலில் அவதானமாக நகர்ந்தன.

இருளில் மறைந்தபடி - இலக்குகளை நோக்கி அசைந்து கொண்டிருக்கும் ஏதாவது ஒரு புலியணி, எங்காவது ஒரு இடத்தில் பகைவனின் பதுங்கித் தாக்குதல் குழுவிடம் சிக்கினால் அல்லது உருமறைப்பில் காத்திருக்கும் கண்காணிப்பு நிலைகளில் உள்ள படையினரின் கண்களில் எத்துப்பட்டால் — ... நகர்வு .
தளமதிந்த இரகசியமாகும் -
இழப்பும் அதிகமாகும் -
தாக்குதல் திட்டமும் கேள்விக்குரியதாகிவிடும்.

நகர்விற்கான ஆணை பிறப்பித்துவிட்டு தொலைத்தொடர்புக் கருவிக்கு காதுகொடுத்தபடி நெஞ்சுகனக்க காத்திருந்த தலைவருக்கு நிம்மதி தரும் செய்திகளே வான் அலைகளூடாக வந்துகொண்டிருந்தன. தாக்குதல் அணிகள் அனைத்தும், தாக்குதலைத் தொடங்கவேண்டிய இடங்களுக்கு தங்குதடையின்றிப் போய்ச்சேர்ந்து - தாக்குதல் ஆணைக்காகக் காத்திருந்தன.

பலநாட்கள் முயன்று - தகவல் சேகரித்து - நேர்த்துடன் செயற்பட்ட வேவுப்புலி வீரர்களின் தாக்குதலை புலி அணிகள் தொடுத்தன.

கிளிநொச்சித்தளத்தின் முன்னரங்கம் புலிகள் வசமாகிவிட்டது என்ற செய்தி தளப்பிரிகேட் தலைமையை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அடுத்ததாக பலமான நிலைகள் ( STRONG POINT ) என்று எதிரி அழைத்த உள்ளக பாதுகாப்பு வேலி தாக்குதலுக்கு உள்ளாகலாம் என்று தளத்தலைமை அஞ்சியது. எனவே, இழந்த முன்னரங்க காவல் அரண்களை மீண்டும் கைப்பற்றவேண்டிய தேவை அத்தியாவசியமானது.

இதேசமயம், தாக்குதலின் ஆரம்பத்திலேயே புலிகளின் ஆட்லறித்தாக்குதலும் மோட்டார்த்தாக்குதலும் படைத்தளத்திலுள்ளிருந்த முக்கிய இலக்குகளை குறிபிசகாது தாக்கத்தொடங்கின.

ஏவிய மோட்டார்குண்டுகளில் ஆறு குண்டுகள் படையினரின் மோட்டார் ஏவுதளத்தில் அடுத்தடுத்து வந்துவீழ்ந்தன" என்று சண்டேரைம்சின் இராணுவ விமர்சகர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இவ்விதமாக எதிரியின் ஆட்லறி- மோட்டார்தாக்குதல்களின் வீரியம் கட்டுப்படுத்தப்பட்டது. பகைவனின் எறிகணைமழை என்ற பாரிய அச்சுறுத்தலை மெதுமைப்படுத்த உதவிய கேணல் கிட்டு பீரங்கிப்படையணி, அதேசமயம், பகைத்தளம் மீது இடைவிடாது நாசத்தைப் பொழிந்தது.

27ம் திகதி அதிகாலை தொடங்கி விடிகாலைக்கு முன் முடிவுபெற்ற திகைப்புத்தாக்குதலில் கிளிநொச்சித்தளத்தின் முன்னரங்கநிலைகள் புலிகளிடம் வீழ்ச்சிகண்டிருந்தாலும் - பகைவன் தரப்பில் ஏற்பட்ட உயிரிழப்பு குறைவாகவே இருந்தது.

முன்னரங்கநிலைகளில் இருந்த சில பலமான நிலைகள் வேலிக்குப் பாதுகாப்பாக மட்டுமல்ல தளத்தின் பாதுகாப்பின் தூண்களாகவும் செயற்பட்டன. இருவையாறுகுளப்பகுதி இத்தகைய பாதுகாப்பு நிலையில் பிரதானமானது.

இந்த பலமான - அபாயம் நிறைந்த பகைநிலையை தாக்கி அழிக்கும்பொறுப்பு ஜெயந்தன் படையணியைச் சேர்ந்த லெப். கேணல் சித்தா தலைமையிலான தாக்குதல் அணியிடம் வழங்கப்பட்டிருந்தது.

கிளிநொச்சித்தளம் வீழ்ச்சியுறவேண்டுமாயின் முதலில் இந்த கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலை கைப்பற்றப்பட வேண்டும். அப்போதுதான் மட்டுப்படுத்தப்பட்ட இழப்புடன் தளத்தைக் கைப்பற்றமுடியும்.

குறித்த பகைநிலையை முழுமையாகக் கைப்பற்றினாலும் திட்டம் →



படலை பிய்த்து வறுகிய சிங்களத்தும் பட்டிச்சிங்கங்கள்
பசிவழி கொண்டோடி மீதிவழி விட்டோடிய கவசவூர்திகள்



www.eelamview.com

முழுமைபெறாது. அந்தப் பகைநிலைக்கு இருபுற முள்ள அரண்களையும் வெற்றிகொண்டு - ஊடறுத்தபடி இரண்டு புலியணிகள் குறித்த பகைநிலைக்குள்ளே புகுந்த போராளிகளுடன் இணைந்துக்கொள்ள வேண்டும். அதுவும் ஒரு குறிக்கப்பட்ட நேரத்துள் இணைந்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் திட்டம் முழுமைபெறும்.

வலது - இடது என இருபுறமிருந்தும் குறித்த பகைநிலையுடன் இணைப்பு ஏற்படுத்துவதில் தோல்விகண்டால் இலக்கினுள் நுழைந்த புலி அணி மரணப்பொறிக்குள் சிக்கிக்கொள்ளும். அணி முழுமையாகவே அழிந்துவிடும். தாக்குதல் திட்டத்தை தயாரிக்கும்போதே இவை அனைத்தும் அலசி ஆராயப்பட்டே இருந்தன. ஆயினும், தளத்தின் வீழ்ச்சிக்கு இந்த அபாயம் நிறைந்த தாக்குதல் திட்டம் அவசியமானதாகவே இருந்தது.

கரும்புலிச் செயற்பாட்டிற்கு ஒத்த செயற்பாடுள்ள திட்டத்தை நிறைவேற்றும் நோக்குடன் சித்தா தலைமையிலான 50பேர் கொண்ட அணி அந்த அபாயநிலையினுள் சாதுரியமாகப் புகுந்து தாக்குதலைத் தொடக்கியது. மிகையான ஆட்பலத்துடன் இருந்த பகைநிலைக்குள்ளே சித்தாவின் அணி அபாரமாகப் போரிட்டது.

இதேசமயம், அந்தப் பகைநிலைக்கு இடது - வலது புறமாக இருந்த அதன் இருவாசல்களிலும் சண்டைகள் தீவிரமாக நடந்தன. இணைப்பை ஏற்படுத்த முயன்ற இரண்டு புலி அணிகள் எவ்வளவோ முயன்றும் குறித்த நேரத்திற்குள் அதை வெற்றிகரமாகச் செய்யமுடியவில்லை.

இதனால் சித்தாவின் சிறிய அணி தன்னந்தனியே நின்று பகைநிலையுடன் மோதவேண்டிய இக்கட்டான நிலை எழுந்தது. எதிரியை சேதப்படுத்தியபடி சித்தாவின் அணியும் சேதப்படத்தொடங்கியது. திட்டத்தில் பிசகேற்பட்டால் என்ன விளைவை சந்திக்கவேண்டிவரும் என்று தெரிந்தே போன சித்தாவும் - அவனது அணி வீரர்களும், செய்தி சொல்ல ஓரிருவரைத்தவிர - முழுமையாக தங்களை அர்ப்பணித்தார்கள். கிளிநொச்சித்தளத்தின் பாதுகாப்பிற்கு தூணாக விளங்கிய அந்தப் பகைநிலை, தளம் தாக்கப்பட்டபோது அதைப் பாதுகாக்கச் சண்டையிடுவதற்குப் பதிலாக தன்னைப்பாதுகாக்க போரிடவேண்டிய நிர்ப்பந்தத்தைக் கொடுத்த சித்தாவின் அணி - வெற்றிக்காக தங்களையே விலையாக்கி - கரும்புலி அணிபோலச் செயற்பட்டு வீரச்சாவடைந்தார்கள்.

இதேபோன்று மேஜர் கவிபா தலைமையிலான பெண்போராளிகள் அணிஒன்று வெற்றிக்கு விலையாக தங்களை அர்ப்பணித்திருந்தனர்.

அது, உருத்திரபுரம் பகுதி முன்னரங்கின் முக்கிய பகுதியை கைப்பற்றும் தாக்குதல்.

வெட்டவெளியூடாக கட்டடக்காட்டை நோக்கிநகரும் ஆபத்தான - அதேசமயம் தவிர்க்கமுடியாத சண்டை அது.

கெட்டித்தனமாக பகைவனின் நிலைகளுக்குள் புகுந்த கவிபாவின் அணியினர் தீரமாகச் சண்டையை நடாத்தினார்கள்.

[illegible]ற பகைநிலைகள் புலிகள்வசமும் - [illegible]பகைவன் வசமுமாக மாறிமாறி வீழ்ந்து - உயிர்த்துக்கொண்டிருந்தன.

தனிஒரு அணியாக இரவும் - பகலுமாக மிகநீண்டநேரம் சண்டையிட்ட கவிபாவின் அணி சேதமாகிக்கொண்டே சென்றது.



ஓயாத அலைவிழுங்கிய படைத்தளத்தில் உயிரேய்ந்த படையுடல்கள்

சேதத்தை ஈடுசெய்ய உதவிஅணி ஒன்று போராடி - உட்புகுந்து கவிபாவின் அணியை மீட்க முனைந்தனர். மேஜர் கவிபாவும் அவரது அணியின் பெரும்பகுதி வீராங்கனைகளும் சளைக்காது சமராடி - விழுப்புண்ணடைந்து - வீரச்சாவடைந்து விட்டனர்.

இவ்விதம் இதயத்தை தொடும் வீரச்சம்பவங்கள் இன்னும் நடந்திருந்தன.

தளத்தின் முன்னரங்க பாதுகாப்பு வேலியை கைப்பற்றிய தாக்குதலில் ஜெயந்தன் படையணி - அன்பரசி படையணி - மாலதி படையணி - புலனாய்வுத்துறைப் படையணி - சந்தோசம் படையணி மற்றும் மனலாற்றுப்படையணிகளும் முக்கிய பங்கேற்றன. பாதுகாப்பு நிலையைத் தாக்கி உடைத்து - பாதைகளைப்பிடித்து தாக்குதல் அணிகளை பத்திரமாக உள்நகர்த்திவிட்ட பணியை இந்த அணிகள் கச்சிதமாகச் செய்தன.

இம்முறை கிபிர்குண்டுவீச்சு விமானங்கள் - முன்பு போல புலிவீரர்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கவில்லை. புலிகளின் விமான எதிர்ப்புப் படைப்பிரிவினரது வான் பாதுகாப்பு - தரைத்தாக்குதல் அணிகளுக்கு நிம்மதியையும் உற்சாகத்தையும் ஊட்டின. இது கிளிநொச்சி தளப்படைக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது.

முன்னரங்க பாதுகாப்பு நிலைகள் ( F. D.L ) அடியோடு துடைத்தெறியப்பட்ட பின்னர் தளத்துள் உள்ள பாதுகாப்பு ஏற்பாட்டு வேலிகளான பலமான நிலைகள் - ஆழமான நிலைகளை நோக்கி புலிகளின் தாக்குதலணிகள் வேகமாக நகர்ந்தன.

உள்ளகப் பாதுகாப்பு உறுதியுடன் இருந்ததால் புலிகளின் அணிகள் பலத்த எதிர்ப்பை எதிர்கொண்டன. இந்த இரண்டாங்கட்ட தாக்குதலின் முக்கிய இலக்குகளாக பிரிமுகாம்களும் - பிரதான தளமும் இருந்ததால் தாக்குதல் கடினமானதாகவேயிருந்தது.

பிரிமுகாம்களும் - பற்றாலியன் தலைமையகங்களும் தாக்குதலுக்குள்ளாகிக் கொண்டிருக்க - தளத்தின் பிரதான முகாமை கைப்பற்றும் பொறுப்பு சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

முன்னரங்கநிலைகளையும், பலமான நிலைகளையும் உடைத்து பாதைசமைத்த சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு, ஆழமான நிலைகளையும் உடைத்தெறிந்து - வழிதிறந்து - தளத்தின் இதயமென விளங்கிய பிரதான முகாமில் புயல்வீசச் செய்தது. இந்தத் தாக்குதலின்போது சிறுத்தைப்படைப்பிரிவினர் உதவி அணியாகச் செயற்பட்டனர்.

ஒன்றன்பின் ஒன்றாக பிரிமுகாம்களும் - பற்றாலியன் தலைமையகங்களும் வீழ்ச்சிகாணத்தொடங்கின. பிரதான முகாம் நிலைகுலைந்தது. தளத்தினுள்ளே இருந்த படையினர்க்கிடையேயான தொடர்பும் - விநியோகமும் அறுந்தன. தளத்தின் செயற்பாட்டுக் கட்டமைப்பு குலைந்தது.

சிதறிக்காணப்பட்ட படையினரை அவசரம் அவசரமாக →

## செந்தமிழர் வீரம் பேசுகின்ற தேசம்

புலிவேங்கை புதுமரபில் போர்புரிந்து
தமிழ்மறவர் தலைநிமிர
தலைவன் தலையசைவில்
பகை மிரளப் படைநடத்தி
பலம் பொருதி பகை விரட்டி
பலநூறு படையுடல் வீழ்த்தி
பார்புகழ மீண்டுமொரு
ஓயாத அலை நடத்தி
தமிழ் மரபை உலகறிய
இளைபரப்பி கிளி நகரில்
புலிக்கொடி ஏற்றி
புதுவீரம் நிலைநாட்டி
தமிழ்வீரம் தனைக்காட்டினான்.
இவன்,
புதுவேதம் உருவாக்கினான் - எம்
மண்மீட்க வழி காட்டினான் - தொடர்
வெற்றிக்கு உரமூட்டினான்.
வீழ்ந்த வேங்கைக்கு
தலைசாய்த்து விளக்கேற்றினான்
மாவீரர் நினைவோடு மலர் தூவினான்.

அவர் கனவோடு போரிற்குப் புடைசூழ்ந்திடுவோம்
பெரும் புயலென
பகை நோக்கிப் பாய்ந்திடுவோம்.
அலைகள் மட்டுமல்ல
புலிகளும் ஓய்வதில்லை - என
தமிழர் படையணி திரண்டிடும்
இனியும்
பகைவாழ் தளங்கள் அழிந்திடும்
இருள்கொண்ட - எம்
தேசம் விடிந்திடும்.

செந்தமிழர் வீரம்
பேசுகின்ற தேசம் - அது
தமிழீழம் தானே,
செந்தமிழின் வாசம்
வீசுகின்ற தேசம் - எம்
தனி ஈழம் தானே.

- போராளி
ப. கவித்தமிலன்



www.eelamview.com

ஒருங்கிணைந்த பிரிகேட் தலைமையகம் புதிய - புதிய பாதுகாப்பு வியூகங்களை ஏற்படுத்தி தம்மை தற்காக்கவும் பிரதானமுகாம் பகுதியை பாதுகாக்கவும் சண்டையிட்டனர்.

இந்தப் புதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் மீதும் புலிகளின் அணிகள் பாய்ந்தன. கிளிநொச்சித்தளம் படிப்படியாக சுருங்கத்தொடங்கியது. சுருங்கிய தளத்தினுள் நெருங்கி நின்ற படையினர் புலிகள் ஏவிய எறிகணைகளால் திக்குமுக்காடினர். உதவிப்படை வேண்டி ஆனையிறவுப் படைத்தளத்தை எதிர்பார்த்து நின்றனர்.

27 ஆம் திகதி மாலை தொடங்கிய இந்த இரண்டாம் கட்டத்தாக்குதல் 28 ஆம் திகதி மாலை வரை தொடர்ச்சியாக நடந்தது.

28 ஆம் திகதி காலை 10 . 00 மணியளவில் பரந்தனிலிருந்து ஒரு உதவிப்படை ராங்குகள் சகிதம் கரடிப்போக்கு ஊடாக கிளிநொச்சியை அடைய முயன்றது.

கவசங்களின் துணையுடன் நகர்ந்த பெருந்தொகையான காலாட்படையை பரந்தனுக்கு அருகிலேயே புலிவீரர்கள் எதிர்கொண்டு – சமராடினர். விக்டர் கவசஎதிர்ப்பு படையணியின் வீரர்கள் கவசங்களை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

தடையுடைத்து நகர்புகவந்த ராங்குகளில் இரண்டு குண்டடிபட்டு எரிந்து – கருகியது. ஒன்று சேதப்பட்டு பின்வாங்கி ஓடியது. உதவிக்கு வந்த படை சிதைந்து – சிதறி வந்தவழியே ஓடியபோது கிளிநொச்சித்தளம் கைவிடப்பட்டதளமாகியது. கைக்கு எட்டிய தூரத்தில் தனது சகோதர பிரிகேட்டுகளும்- தாங்டிவிசனும் இயலாமையில் கைவிரிக்க கிளிநொச்சிப்படைத்தளம் அநாதையானது. நிலம் விழுங்கவந்து அநாதையான 543 வது பிரிகேட்டை– புலிகள் ஈவிரக்கமின்றித் தாக்கினர். ஒரு இலட்சம் மக்களை வீடுகளிலிருந்து எழுப்பிக்கலைத்து அகதிவாழ்வு வாழவைத்த படையினரை, புலிவீரர்கள் அகதிகளாக்கிக் கொண்டிருந்தனர்.

உதவுவோர் இல்லாதநிலை உறுதியானவுடன் உயிர்காத்துக்கொள்வதற்காக தளத்தை விட்டோட பிரிகேடியர் முடிவெடுத்தார். 28ஆம் திகதி மாலை 4. 30 மணியளவில் விட்டோடும் படலம் ஆரம்பமானது. காயமடைந்த படை அதிகாரிகள் சிலரையும் மற்றும் சில ஆயுததளபாடங்களையும் வாகனங்களில் ஏற்றியபடி கரடிப்போக்குச் சந்திக்கும் பரந்தனுக்குமிடையில் மறித்துநின்ற புலிப்படைநிலைகளை ஊடறுத்துக்கொண்டு பரந்தனூடாகப் புகுந்தோட படையினர் தீர்மானித்தனர்.

கிளி- பரந்தன் பிரதான பாதையையும், பாதைக்கு கிழக்கு – மேற்காக சுமார் 200 மீற்றர் நிலப்பரப்பையும் தமது ஓடுதளமாக்கிக்கொண்டு ஓடமுற்பட்டனர்.

உயிர் தப்பியோட முற்பட்டவர்களுக்கு குறுக்கே மறிப்புப்படையணிகளாக ஜெயந்தன் படையணியும் - மாலதி படையணியும்- சோதியா படையணியும் - விக்டர் கவச எதிர்ப்பு படை யணியும் நிலையெடுத்து நின்றது.

தமது எரிபொருள் களஞ்சியத்திற்கு தீமூட்டிவிட்டு – சில ஆயுததளபாடங்களையும் அழித்துவிட்டு ஓடு படலத்தை தொடக்கினர்.

படையினரைப் பொறுத்தவரை அது வாழ்வுக்கும் - சாவுக்குமிடையேயான ஓட்டப்போட்டி.

புலியைக்கண்டு மிரண்டு படலையப்த்து வறுகும் பட்டிமாடுகள் போல - சிங்களப்படை – நாலுகால் பாய்ச்சலில் பரந்தன் சந்தியை நோக்கிப் பாய்ந்தது.

புலிக்குகைக்கூடாக சிங்கங்கள் தலைதெறிக்க ஓடின.

மறிப்பு அலைகளாகச் செயற்பட்ட புலிவீரர்களின் துப்பாக்கிகள் சிங்கவேட்டையைத் தொடங்கின. ஓட்டம் தொடங்கிய ஒரு சில நிமிடங்களிலேயே புலிகளும் – சிங்கங்களும் ஒன்று கலந்தன.

ஒரு குறுகிய நிலப்பரப்பில் புலிகளும் - நூற்றுக்கணக்கான படையினரும் ஒன்று கலந்து சண்டையிட்டபோது களம் பூகம்பப்பூமியானது.



கிளிநொச்சிப் படைத்தளத்தில் புலிகளிடம் சிக்கிய சிங்களத்தின் படையூர்திகள்

குண்டு நிரப்பி, மறுப்பு அணிவீரர்கள் வைத்திருந்த ரவைக்கூடுகள் அனைத்தையும் கட்டுத்தீர்த்து எதிரிகளைக் கொத்துக்கொத்தாக வீழ்த்தியபோதும் - படையினர் மிச்சமாகவே இருந்தனர்.

மறிப்புக்களம் பல மயிர்க்கூச்செறியும் அனுபவங்களை அனுபவித்தது.

தொலைவில் இருக்கும் படையினரை குறிவைத்து வீழ்த்த நினைப்பருடன் நின்ற சிறப்புப்படை வீரனொருவன், துப்பாக்கி நுனிமுட்டும் தூரத்தில் ஓடிய படையினரை குண்டுமுடியும்வரை சுட்டபின் எறிகணைச்சிதறல்களிலிருந்து தப்புவதற்காக குப்புற வீழ்ந்து படுத்தபோது தனக்கு மேலால் ஏறிமிதித்து சிங்களப்படையினர் பலர் ஓடிய செய்தியை சொல்வதற்கு உயிருடன் இருந்தான்.

உயிரைக்காப்பாற்றிக்கொள்ள படையினர் தலைதெறிக்க ஓடிக்கொண்டிருந்த போது - தங்களது உயிர்களைப் பற்றி கவலைப்படாது தம்மையும் சேர்த்து எறிகணை வீசும்படி வற்புறுத்திய பெண் தளபதி லெப். கேணல் செல்வி உயிருடன் வரவில்லை.

காயப்பட்டு மருத்துவ ஆகழியில் மல்லாந்திப் படுக்கவைக்கப்பட்டு- வலியால் முனகிக்கொண்டிருந்த தோழனொருவன் தனக்கு மேலே சிங்களப் படையினர் பலர் நிலையெடுத்துப்படுத்து – எழும்பியோடிய கதையைச் சொல்லிவிட்டு - பின்னர் வீரச்சாவடைந்துவிட்டான்.

அந்தப் பூகம்பப்பூமியில் நிலையெடுத்து நின்ற தனது அணியின் வோக்கித் தொடர்பைக் காணவில்லையென நேரே சென்று கண்டுவர கைக்குண்டுகளுடன் களமிறங்கிய அணித்தலைவன் மீண்டுவரவேயில்லை.

சிங்கவேட்டை நடாத்திய ஒரு இயந்திரத்துப்பாக்கிக்கு அருகே மூன்நூறுக்கும் மேற்பட்ட வெற்றுரவைகள் குவிந்துகிடந்தன. சில பத்துயார்கள் தள்ளி ஐம்பது வரையான படையுடல்கள் சிதறிக்கிடந்தன. துப்பாக்கியை இயக்கியவரை அங்கு காணவில்லை. ஆனால், இயந்திரத்துப்பாக்கியும் – அந்த நிலையும் அதை இயக்கியவரின் இரத்தத்தால் குளிப்பாட்டப்பட்டுக்கிடந்தன.

கொண்டுசெல்லவென தயாராக வைத்திருந்த வாகனங்களையும்- பொருட்களையும் தாக்குதலின் கர்ணகடூரத்தால் விட்டுவிட்டோடிய காட்சியையும், ஓடும்போது துப்பாக்கி உட்பட கையிலும்- முதுகிலும் சுமந்தோடிய பொருட்களை ஒவ்வொன்றாக கழற்றி எறிந்தபடி படையினர் ஓடிய காட்சியையும் மலர்ச்சி பொங்க போராளிகள் விபரிக்கின்றனர்.

படையினர் ஓடத் தொடங்கிய கரடிப்போக்குச் சந்தியை ஒட்டியபகுதியிலிருந்து பரந்தன்வரை அவர்கள் ஓடியவழி படையினரின் பிணங்களால் பாதை அமைக்கப்பட்டது போல ஓடுவளம் நெடுக இராணுவத்தினர் செத்துக்கிடந்தனர்.

மறிப்புக்களத்தில் சண்டை முடிந்தபோது 400க்கும் மேற்பட்ட படையினரின் சடலங்கள் குவிந்துகிடந்தன.

இந்த மறிப்புச்சண்டைக் களத்தில் மட்டும் சுமார் 40 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

தளத்தின் பிரிகேடியர் உபாலி எதிரிசிங்க உட்பட சில நூற்றுக்கணக்கான படையினர் உயிருடன் தப்பியோடி- ஆனையிறவு போய்ச்சேர்ந்தனர்.

சரியாக 39 மணிநேர முற்றுகையுடன் கூடிய வேகத்தாக்குதலைத் தொடர்ந்து கிளிநொச்சித்தளம் புலிகள் இயக்கத்தால் மீட்கப்பட்டது.

ஓயாத அலைகள் – 02 என தலைவரால் பெயரிடப்பட்ட இந்தப் பெருந்தாக்குதலில் 1250 க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டிருந்தனர்.

புலிகள் தரப்பில் 398 போராளிகள் வீரச்சாவடைந்தார்கள்.

மூன்று கட்டங்களாக - சத்ஜய பெயக்ல் - 70 நாட்கள் முயன்று- தாக்கி பகைவன் கைப்பற்றிய கிளிநொச்சி, 39 மணிநேர தீரமிகு தாக்குதல் சண்டைகளின் பின், தமிழர் படையிடம் தஞ்சம் புகுந்துவிட்டது.

மாங்குளத்தையும் கடந்துவரப்போகும் ஜயசிக்குறுய் இராணுவ பூதத்தை கைகொடுத்து வரவேற்று தமிழர் நிலத்திற்கு கால் விலங்கிடும் என்று சிங்களம் கனவுகண்ட கிளிநொச்சிப்படைத்தளம் தயவுதாட்சண்யமற்ற முறையில் புலிவீரர்களால் துடைத்தெறியப்பட்டுவிட்டது.

மீட்டெடுக்கப்பட்ட நகரில் புலிக்கொடியை மாலதி படையணித்தளபதி விதுசா ஏற்றிவைக்க, கொடி வணக்கத்தை தளபதி தீபன் நிறைவேற்றினார். தமிழரின் போர் வரலாற்றில் ஒரு புதிய போர் அத்தியாயம் கிளிநொச்சியில் அரங்கேறியுள்ளது.

O

# ஓயாத அலைகள்-II சொன்ன செய்திகள் என்ன!

## ஒரு மதிப்பீடு

சுமார் 500 தருப்பினரை விலையாகக் கொடுத்து படையினர் ஆக்கிரமித்த கிளிநொச்சிப் பகுதியை – 1000 த்கும் மேற்பட்ட இராணுவத்தினரைப் பலியாக்கி, புலிகள் பறித்தெடுத்துள்ளனர்.

ஓயாத அலைகள் – 02 எனப் பெயரிடப்பட்டுள்ள கிளிநொச்சித்தளம் மீதான புலிகளின் தாக்குதல் பல்வகை இராணுவ அம்சங்களை வெளிப்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாண ஆக்கிரமிப்பிற்குப்பின்னர் கடந்த மூன்று வருடகாலமாக தரைச் சண்டைகளின்போது– 'கிபிர்' குண்டுவீச்சு விமானங்கள் ஆற்றிவந்த அச்சுறுத்தல் பாத்திரத்தை ஓயாத அலைகள்-02 இன் போது ஆற்றமுடியவில்லை.

புலிகள் இயக்கத்தின் விமான எதிர்ப்புப் படைப்பிரிவின் வளர்ச்சி – 'கிபிர்களின் ஏகபோக வான் ஆதிக்கத்திற்கு சவால்விடுக்கும் அளவுக்கு நவீனமயப்பட்டுள்ளது.

சத்ஜய சமரின்போது நாளொன்றுக்கு, ஏழு- எட்டுத் தடவைகள் பறந்துவந்து தாம்விரும்பியவாறு குண்டுகளைவீசி- புலியணிகளுக்கு தொல்லைகள் பலகொடுத்த கிபிர்கள், கிளிநொச்சியின் ஆயிரம் படையினர் அழியும் நிலையில் இருந்தவேளையிலும், நாளொன்றுக்கு ஒன்று அல்லது இரண்டு தடவைகள் மட்டுமே பறந்துவந்து – அதி உயரத்தில் நின்றபடி - இலக்குகளற்று குண்டுவீசிவிட்டுச் செல்லும் நெருக்கடிக்குள் சிக்குண்டிருந்தன.

ஓயாத அலைகள் - 02 வெளிப்படுத்திய இராணுவ சாதனைகளில் கிபிர்களின் கொட்டம் அடக்கப்பட்ட இந்த இராணுவ அம்சமும் முக்கியமானதாகும்.

சக்திமிக்க இராணுவ வழங்கல் மார்க்கத்தைக் கொண்ட வலிமை மிக்கதொரு பாரிய கூட்டுத்தளத்தின் ஓர் அங்கமாக இருந்த கிளிநொச்சித்தளத்தை- 'கேக்' துண்டு வெட்டியெடுக்கப்படுவதுபோல – துண்டுபோட்டுக் கைப்பற்றி, அதைப் போராடித் தக்க வைத்திருப்பது இன்னுமொரு முக்கிய இராணுவ அம்சமாகும்.

மரபுப்போர்முறையின் பிரத்தியேக குணாம்சமாக இந்த நிலத்தக்கவைப்பு அமைகின்றது. இதைச் சாதிப்பதற்கு ஆட்பல உயர்வுடன் – மரபுப்போர் ஆயுதங்களின் அதிகரித்த பயன்பாடும் - மரபுப்போர்த்திறனின் வளர்ச்சியும் அவசியம். படையினரை விஞ்சக்கூடியவகையில் இந்த விசேட இராணுவப் பண்புகளை புலிப்படை படிப்படியாகப் பெற்று ஒரு நிலையான இராணுவமாக (Standing Army) வளர்கின்றது என்பதையே கிளிநொச்சி வெற்றி காட்டுகின்றது.

இந்த ஆண்டு (98) மாசிமாதம் முதலாம் திகதி கிளிநொச்சித்தளம் மீதான தாக்குதலின்போது ஒன்றரைக் கிலோமீற்றர் நீளமும் சுமார் 08 கிலோ மீற்றர் சுற்றளவையும் கொண்ட தளப்பகுதியின் நிலத்தை புலிகள் மீட்டெடுத்தனர்.

இப்போது, ஓயாத அலைகள்-02 இன்போது, மேலும் நான்கு கிலோமீற்றர் நீளமும் 05கி.மீ. அகலமும் சுமார் 16 கிலோ மீற்றர் பரப்பளவையும் கொண்ட தளப்பகுதியின் நிலத்தை புலிகள் மீட்டெடுத்துள்ளனர்.

இந்தவகையில் 24 சதுர கிலோமீற்றர் தளப்பகுதியை புலிகள் மீட்டெடுத்து உள்ளனர். இந்த நிலத்தை அண்டியிருக்கின்ற சுமார் 75 சதுர கிலோமீற்றர் பகுதி, ஆக்கிரமிப்பு அகன்ற பகுதியாகிவிட்டது. மொத்தத்தில் 100 சதுரகிலோமீற்றர் நிலம் விடுவிக்கப்பட்டுவிட்டது.

மூன்று கட்டங்களாக நடந்த சத்ஜய இராணுவ நடவடிக்கை மூலம் படையினர் 12 கிலோமீற்றர் நீளத்தில் – 05 கி.மீ, அகலத்தில சுமார் 60 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் கிளி - பரந்தன் – ஆனையிறவு படைத்தளத்தை அமைத்து வைத்திருந்தனர். இந்த தள அமைப்பால் இதைச் சூழ்ந்திருந்த சுமார் 100 சதுர கிலோமீற்றர் நிலப்பகுதி, மக்கள் வாழாப் பகுதியாக கைவிடப்பட்டிருந்தது; இந்தவகையில் கிளிநொச்சிப் படைத்தளத்துடன் கூடிய 160 சதுர கிலோமீற்றர் நிலம் இராணுவ சூனியப்பிரதேசமாக முன்னர் இருந்தது.


ஆனால், இப்போது, இந்த இராணுவ சூனியப்பகுதி, நீளத்தில் அரைப்பங்காகக்குறைந்து- பரப்பளவில் மூன்றில் ஒன்றாக குறைக்கப்பட்டு நிலச்சுருக்கம் அடைந்துள்ளது. இந்த நிலச்சுருக்கத்தை தடுக்கமுடியாத கையறுநிலையில் சிங்களப்படை உள்ளது என்பதே வடபுலத்தின் இன்றைய இராணுவ யதார்த்தமாகும்.

முல்லைத்தீவுத்தளம் வீழ்ச்சியுறும்போது அதைப் பாதுகாக்க உதவிப்படையாக அனுப்பப்பட்ட சிங்களப்படைகள் அடித்து விரட்டப்பட்டது தெரிந்ததே; அதுபோல, கிளிநொச்சித் தளத்தைக் காப்பாற்ற பலமானதொரு உதவிப்படை அனுப்பப்பட்ட போது அதுவும் முறியடிக்கப்பட்டது.

ஓயாத அலைகள் - 01 இன் போதும் ஓயாத அலைகள்-02 இன் போதும் சிங்களம் அனுப்பிய உதவிப்படைகள் இரண்டும் தோற்கடிக்கப்பட்ட உண்மைகள் ஒத்த சம்பவமாக தென்பட்டாலும் இந்த இரண்டு இராணுவ நிகழ்ச்சிகளும் வெவ்வேறான இராணுவ பரிமாணம் கொண்டவையாகும்.

முல்லைத்தளம் தனித்த தீவைப்போல தனியாகக்கிடந்தது. உதவிப்படையாக புதிய இடத்தில் வந்திறங்கிய சிங்களப்படைகள் களம் நோக்கி நகர்வதில் எழுந்த சிக்கல் தவிர்க்கமுடியாதது. முல்லைத்தீவில் உதவிப்படை சந்தித்த தோல்வி சிங்களப்படைக்கு கிடைத்த தோல்விதான். ஆயினும், இராணுவ ரீதியாக அது விளங்கிக்கொள்ளத்தக்கது.

ஆனால் M. S. R. எனப்படும் இராணுவ வழங்கல் மார்க்கத்துடன் ( MILITARY SUPPLY ROUAL ) இருந்த ஒரு பெருந்தளத்தின் ஒரு பகுதிக்கு ( கிளிநொச்சிக்கு ) உதவிப்படைகள் செல்லமுடியாமல் போனதை எந்த இராணுவக் காரணியினாலும் நியாயப்படுத்த முடியாது. அது சிங்களப்படையின் இயலாமையையும் - புலிப்படையின் மிகையாற்றலையும் →






www.eelamview.com

அப்பட்டமாக எடுத்துக்காட்டியுள்ளது.

சிங்களப் படைத்தலைமையைப் பொறுத்தவகையில் ஓயாத அலைகள் – 02 இல் பலியான ஆயிரம் படையினரையும் - அங்கே புலிகள் கைப்பற்றிய பெருந்தொகை ஆயுததளபாடங்களுக்கும் அப்பால் கிளிநொச்சியை மீளக் கைப்பற்ற முடியாமல் போனதுதான் அதிக பிரச்சனையை அவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் படைத்தலைமையின் தற்போதைய போர்த்திட்டம் (பாதை அமைப்பு) இதனால் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது.

'உண்மை வெற்றி' ( சத்ஜய ) என்று பெயரிட்டு படையினர் ஆக்கிரமித்த கிளிநொச்சிப்பிரதேசத்தில் - அன்றிலிருந்து இன்றுவரை - சிங்களப்படைகள் சந்தித்து வரும் உயிரிழப்பும், தோல்விகளும் சத்ஜயவை. 'பொறுஜய' ( பொய் வெற்றி ) ஆக்கியுள்ளது.

மூன்று கட்டங்களாக நடந்த சத்ஜய சமரில் 700 படையினர் பலியாகி இருந்தனர்.

97 ஆம் ஆண்டு தை மாதம் பரந்தன் - ஆனையிறவு தளம்மீது நடந்த பெரும் தாக்குதலில் 300 படையினர் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்த வருட ( 98 ) ஆரம்பத்தில் கிளி – பரந்தன் – ஆனையிறவு படைத்தளம் மீது புலிகள் நடாத்திய தாக்குதலில் 200 படையினர் பலியாகியிருந்தனர்.

இந்த தாக்குதலில் இழந்த பகுதிகளை மீட்க படையினர் நடாத்திய இரண்டு பாரிய முயற்சிகளின்போது மட்டும் 500 படையினர் கொல்லப்பட்டிருந்தனர். இதைவிட அன்றாடம் நடந்த சிறு சிறு சண்டைகளில் சுமார் 90 படையினர் பலியாகியிருந்தனர்.

தற்போது, ஓயாத அலைகள்- 02 தாக்குதலில் 1000த்தும் அதிகமான படையினர் பலியாகியிருந்தனர்.

இந்தவகையில் – சத்ஜய தொடங்கியதிலிருந்து இன்றுவரையான 26 மாதங்களில் - கிளிநொச்சி, பரந்தன், ஆனையிறவு முனையில் மட்டும் 3000த்தும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டுவிட்டனர். இதனுடன் இதே போர் அரங்கில் படையினரின் 09 ஆட்டிலறிகள் நாசமாக்கப்பட்டிருந்தன. 07 ராங்குகள் அழிக்கப்பட்டிருந்தன. பெருமெடுப்பிலான வெடிப்பொருள் களஞ்சியங்கள் அழிக்கப்பட்டிருந்தன.

சிங்களத்தின் 'உண்மைவெற்றி' இவ்வாறு படாதபாடுபட்டபடியுள்ளது.

'உண்மை வெற்றி'யை பொய்வெற்றியாக்கி விடுவதில் தீவிரமாகவுள்ள புலிகள் இயக்கம், இதே போர் அரங்கில் மட்டும், 1400 போராளிகளை இழந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சித்தளத்தை அழித்து - நிலத்தை வெற்றிகரமாக மீட்டெடுக்க வேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்தபடி - தலைவர் பிரபாகரன் – கடந்த ஆண்டு தை மாதத்திலிருந்து பல முயற்சிகளைச் செய்து வந்தார். அவரது விடாமுயற்சி இப்போது வெற்றியில் முடிந்துள்ளது.

ஒரு வருடமும் ஐந்து மாதங்களாகவும் ஜயசிக்குறுய் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினரை, கிளிநொச்சி வீழ்ச்சி சலிப்பிற்கும் - விரக்திக்கும் உள்ளாக்கும். ஜயசிக்குறுயின் தலைவிதியும் இவ்வாறுதான் இரத்தம் தோய்ந்ததாக இருக்கப்போகின்றது என்ற எதிர்கால உண்மை, படையினரது மனநிலையைப் பாதிக்கலாம்.

இதை, ரத்வத்தவின் ஜம்பம் அடிக்கும் அறிக்கைகளால் தடுக்க முடியாது போகலாம்.

கிளிநொச்சியில் படையினர் சந்தித்த பேரிழப்பை மறைக்க மாங்குளம் கைப்பற்றுகையை - ரத்வத்த - தூக்கிப்பிடிக்கின்றார். ஆனால், இரண்டு சம்பவங்களும் ஒப்பிடமுடியாதவை. வேறுவேறான இராணுவ பரிமாணங்களை உடையன.

இதேசமயம், கிளிநொச்சி சண்டைகளில் இருபகுதியினரினதும் உயிர் இழப்புக்களை விதாசாரக் கணக்குகளுடன் விளக்கி, கிளிநொச்சியில் புலிகளே தோற்றுள்ளனர் என்று அவர் தீர்ப்புக்கூறுகின்றார்.

கிளிநொச்சித் தாக்குதலில் படையினரின் இழப்பு மொத்த ஆள்பலத்தில் 0. 9 வீதம் என்றும் புலிகளின் இழப்பு 35 வீதம் என்றும் கணக்குக்காட்டியுள்ளார்.

இவ்வாறுதான் முல்லைத்தளம் அழிக்கப்பட்டபோதும் விதாசாரக் கணக்குக்காட்டி அங்கேயும் படையினர்க்குத்தான் வெற்றி என்று முடிவு சொல்லியிருந்தார்.

ஒட்டுமொத்த போர் நிலைமை பற்றியும் கணக்குக்காட்டியுள்ளார். 97 வீதமான போர் முடிவுக்கு வந்துவிட்டது என்று இரண்டு மாதங்களுக்கு முன்னரும் பகிரங்கமாகக் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

ரத்வத்த கூறும் இராணுவக் கணக்குகளை சிங்கள மக்கள் செவிமடுக்கும் வரை, அவர் கணக்குவிட்டுக் கொண்டேயிருப்பார்.

முல்லைத்தீவில் 1000. ஜயசிக்குறுயில 3000. கிளிநொச்சியில் 1300 என சிங்களப்படையினர் தனித்த தாக்குதல்களிலும் – தனித்த ஒரு இராணுவ நடவடிக்கையிலும் பலியாகி வருகின்றனர்.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னான சமர்களில் இவ்வளவு தொகையில் – அடுத்தடுத்து - இராணுவ அழிவு நடைபெற்றதாக வரலாற்றயில்லை.

இத் தொடர்படையழிவைச் சுட்டிக்காட்டி, சந்திரிகா அரசாங்கம் தனது போர்மூலோபாயத்தை மாற்ற வேண்டும் எனறே சிங்களத்தின் பெரும்பாலான இராணுவ விமர்சகர்களும் - சிங்கள அரசியல் தலைவர்களும் ஆலோசனை கூறுகின்றனர்.

ஆனால், அரசாங்கத்தின் இராணுவ அணுகு முறைகளுக்கு கிடைத்துவரும் தோல்வியையே இந்த தொடர்படை அழிவுகள் காட்டுகின்றன என அவர்கள் இடித்து உரைப்பதில்லை.

தமிழரின் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு சிங்கள அரசாங்கங்கள் கடைப்பிடித்துவரும் இராணுவ அணுகுமுறை காலாவதியாகிவிட்டது என்று அவர்கள் எடுத்துக்கூறுவதில்லை.

தமிழ் - சிங்கள இனப்பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்கு அரசியல் ரீதியாக அணுக வேண்டியகாலம் பிறந்துவிட்டது என்று அவர்கள் வலியுறுத்துவதில்லை.

முல்லைத்தீவுத் தளத்தை புலிகள் வெற்றிகொண்டதால் ஏற்பட்ட இராணுவ தன்மைகளால் கிளிநொச்சிப்படைக்கு பேரிழப்பு ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சித்தளத்தை புலிகள் வெற்றிகொண்டதால் கிடைத்த இராணுவ தன்மைகளால் எந்த இடத்தில்? எப்போது? இன்னுமொரு நான்கு இலக்க படையழிவை சிங்களம் சந்திக்கப்போகின்றதோ! ○



# ஆதிமனிதர்களின் குழல்

பஞ்சபூதங்கள் பரிசளித்த ஐஸ்வரியங்கள் அணிந்து
மண்தேவதை சௌந்தர்ய வனப்புற்றாள்.
அவளின் ஆதிமனிதர்கள்
பிறவிச் சுவையை உமிந்தார்கள் அவளில்.
ஆதிமனிதர்களின் வாழ்வின் சூத்திரம்
மண்தேவதையின் மடியிலேயே இருந்தது.

பறவைகளின் வெளியில்
பசிய தாவரங்களில் சலவித்த ஜீவபாசை
அழகின் மர்மங்களை அவிழ்த்தது.
வீட்டின் சூக்கும ஸ்பரிசம்
மெதுமையாய் நீவி வாழ்வின் களைப்புருவியது.
உழைப்பின் வியர்வையில் வெண்ணொளி பூத்தது.
சிநேக இருளில் உறவின் இரகசியங்கள் மலர்ந்தன.
கருணை ததும்பும் மதிவதனத்தில் லயித்து
பனி அரும்பிய மலர்களின் அன்பை முகர்ந்து
காதலாகி வாழ்ந்தார்கள் ஆதிமனிதர்கள்.

II

ஆதிமனிதக்கூட்டின் ஆன்மா நடுங்க
அதன் மண்ணில்
வேற்று மனிதக்கூடு படர்ந்தது.
மண்தேவதையின் ஆதிமனித உயிர்ப்பை
உதடு பொருத்தி உறிஞ்சியது.
சகிக்கவோ சகிக்கவோ முடியாத
வேற்று மனிதக்கூட்டின் எல்லைகளைத்
தாண்டியது ஆதிமனிதக்கூடு.
வேற்று மனிதக்கூட்டின் காந்தவில்
மண்தேவதையின் சௌந்தர்ய வனப்பு அழிந்தது.

ஆதிமனிதக்கூடற்று பாழாய் வெளித்தனவெல்லாம்.
சுடுகாட்டின் அச்சமும் மரண ஓலாலயமும்
குடிகொண்டன அங்கே.
உயிர்க்கூடற்று மண்தேவதை உமிழும் பிரேதக் குளிர்மையில்
பாழடைந்த வீடுகளின் நீவளராக் கணப்புகளில்
கதகதப்புத் தேடிச் சலித்தது வேற்று மனிதக்கூடு.

வேற்று மனிதக்கூடு உலவும்
தெருக்களையும் முற்றங்களையும்
ஆதிமனிதக்கூட்டின் சாபங்கள் நிறைத்தன.
வேற்று மனிதக்கூட்டின் வியூகத்துள் சிக்குண்ட மண்தேவதையை
மோகித்துத் தகித்தது ஆதிமனிதக்கூடு.
தகித்துத் தகித்துப் பெருகி
ஊழைப் பொசுக்கிப் பெருவலியுற்றது!

- எஸ். உமாஜிப்ரான்



www.eelamview.com

# ஓயாத அலைகள் II இன் பின்னணியில் இந்தியத் தளபதி கல்கத்தின் இராணுவ அபிப்பிராயமும் அது தொடர்பான மதிப்பீடும்



லெப். ஜெனரல் A. S. கல்கத்

ஈழத்தில் முக்கியமான இராணுவ நிகழ்ச்சிகள் நடைபெறும் வேளைகளில் ஐ. பி. கே. எவ் இன் பிரதம தளபதியாக பதவிவகித்திருந்த லெப். ஜெனரல் கல்கத் அவர்கள் இராணுவ அபிப்பிராயம் கூறுவதும் - எதிர்வு கூறல் செய்வதும் ஒரு வழமை.

கிளிநொச்சி தள அழிப்பின் பின்னரும் அத்தகைய இராணுவ மதிப்பீட்டை - கல்கத் அவர்கள் - வெளிப்படுத்தியுள்ளார். தனது புதுடில்லி இல்லத்தில் இருந்தபடி 'சண்டேரைமஸ்' பத்திரிகைக்கு தொலைபேசி வழியாக வழங்கிய அவரின் செவ்வி, ஒக்- 11ம் திகதிய இதழில் வெளியாகியுள்ளது.

அவரின் சிலகருத்துக்கள் யதார்த்த பூர்வமாகவுள்ள அதேவேளை, சிலகருத்துக்கள் வெறும் சித்தாந்தமாகவுள்ளன.

"சிறிலங்காவில் போர் நீண்டகாலம் நடக்கின்றது. படையினர் மனச்சோர்வடைந்து விட்டனர். சிங்கள இராணுவம் போரில் களைப்புற்றுவிட்டது" என்று தனது அவதானிப்பை - செவ்வியில் - வெளிப்படுத்தியுள்ள ஜெனரல் கல்கத்... இனப்பிரச்சனைத்தீர்வுக்கு இராணுவத்தீர்வு இல்லை, அரசியல் தீர்வுதான் உண்டு என்று கருத்துக்கூறி பேச்சுவதற்கு இதுதான் தருணம் என்றும் பிரகடனப்படுத்தியுள்ளார்.

மாங்குளத்தைப் படையினர் கைப்பற்றியதைப்பற்றிக் கேட்ட கேள்விக்கு... யாழ் - கண்டி வீதியிலுள்ள ஒரு இடம் தான் மாங்குளம் என்பதைத்தவிர வேறொன்றுமில்லை என்று பதிலளித்துள்ளார். அதேவேளை யாழ்குடாநாட்டிற்கான வாசலை கட்டுப்படுத்தியபடி கிளிநொச்சி உள்ளது என்று கிளிநொச்சிக்கு இராணுவ முக்கியத்துவம் கொடுத்துள்ளார். கிளிநொச்சி புலிகளின் கைகளிற்கு வந்துவிட்டதை கருத்திற் கொண்டு ஆப்

போது யாழ்ப்பாணம் புலிகளின் தாக்குதலுக்குள்ளாகக்கூடிய நிலையில் உள்ளது என்றும், அவர் சிங்கள அரசை எச்சரித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தை படையினர் கைப்பற்றியதைப் பற்றி பத்திரிகையாளர் கேட்டபோது, அது ஒரு அரசியல் தேவையாக சிறிலங்கா அரசுக்கு இருந்தது என்று சந்திரிகா அரசாங்கத்தை சீண்டியுள்ள ஜெனரல் கல்கத், அதன் எதிர்விளைவை பின்வருமாறு வகைப்படுத்துகின்றார் இராணுவத்தின் அரைப்பங்கு ஆட்தொகை குடாநாட்டில் நிறுத்திவைக்கப்பட்டிருப்பதால் மற்றைய இடங்களில் வலிந்த தாக்குதல்களை நடாத்துவதற்கு சிங்களப்படைக்கு ஆட்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று மதிப்பீடு செய்துள்ளார்.

இதேவேளை வவுனியா - கிளிநொச்சி பாதையை கைப்பற்றி வைத்திருப்பது இராணுவ மற்றும் பொருண்மிய ரீதியில சிறிலங்கா அரசுக்கு அவசிய தேவையாக இருந்தது என்றும் கருத்துக்கூறிய அவர், ஆனால் கைப்பற்றிய பாதையை தக்கவைப்பது கடினமானது என்றும் அபாய அறிவிப்புச் செய்துவிட்டு பின்வருமாறு முத்தாய்ப்பு வைக்கின்றார். பாதையின் ஒரு விதம் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாது விட்டால், முழுவீதியுமே படையினரிடம் இல்லாதது போல இருக்கும் என்று மிரட்டியுள்ளார்.

கிளிநொச்சி பறிபோன நிலையில் ஆனையிறவு படைத்தளத்தை பாதுகாக்கும் திறனுடன் படையினர் உள்ளனரா?

என்று பத்திரிகையாளர் கேட்டதற்கு, பின்புலம் பலமாக இருந்தால் அது சாத்தியம் என்று கல்கத் பதிலளித்துள்ளார். அதாவது ஆனையிறவு தளத்தின் பின்புலமான குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படையினர் புலிகளின் தொல்லைகளுக்கு ஆளாகாது விட்டால் ஆனையிறவை பாதுகாப்பது சாத்தியம் என்று அவர் விளக்கியுள்ளார்.

நன்றாகப் பலப்படுத்தி வைத்திருந்த மாங்குளத்தை புலிகள் ஏன் கைவிட்டுப் பின்வாங்கினர் என்று கேட்டபோது, அளவுக்கதிகமான கவனத்தை- புலிகள்- மாங்குளம்மீது செலுத்தவில்லை என்று நினைக்கின்றேன் என்று தனது ஊகத்தை வெளிப் படுத்திய கல்கத் அவர்கள், அதற்கு போரியல் சித்தாந்த மொன்றைக் காரணம் காட்டி விளக்கியுள்ளார்.

நிலத்தை தக்க வைத்திருக்கவேண்டும் என்பதற்காக மட்டும் ஒரு பிரதேசத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்க எந்த ஒரு கெரில்லா இயக்கமும் விரும்ப மாட்டாது என்று சுட்டிக்காட்டிய கல்கத், தனது ஊகத்தை பின்வருமாறு முடித்து வைக்கின்றார்.



பகைத்தளத்துள் ஊருகின்ற பாதைகாணும் தளபதிகள்

மூலோபாய ரீதியாக கிளிநொச்சி அதிகபயன் மிக்கது என்று பிரபாகரன் கருதியிருக்கின்றார் என்றார்.

இவ்விதமாக போர்க்களத்தின் புறநிலை யதார்த்தத்தைக் கருத்திலெடுத்து- நிதானமானவகையில் அபிப்பிராயங்களை வெளிப்படுத்திய இந்தியத்தளபதி- சிங்களப்படைத் தலைமைக்கு இராணுவ ஆலோசனைகளைக் கூறமுற்படும்போது களநிலைமைகளைப் புறந்தள்ளி விட்டு வெற்று இராணுவக்கோசங்களை உதிர்த்துள்ளார்.

சிங்களப்படையின் கையறுநிலையை கிளிநொச்சியில் அவதானித்துவிட்டு பங்கர்மனோநிலை என்ற நோய்தான் சிங்கள இராணுவத்தின் தோல்விகளுக்கு காரணம் என்று கண்டுபிடித்துக் கூறி - அந்த மனநிலையிலிருந்து விடுபட்டு அது வெளியே வரவேண்டும் என்று பரிகாரமும் கூறியுள்ளார்.

நகர்ந்துதாக்கும் வலிந்ததாக்குதல்களில் அக்கறை காட்டாமல் சிங்களப் படையினர், நிலையான இடங்களில் நிலைகொண்டபடி புலிகளின் வரவை எதிர்பார்த்துக் காத்துக்கிடக்கின்றனர் என்று - கல்கத் இராணுவத்தைக் குற்றம் சாட்டியுள்ளார். இது காரணமாகவே சிங்களப்படை பங்கர் மனநிலையைப் பெற்றுவிட்டது என்று - அவர் தீர்ப்புக் கூறியுள்ளார். இந்த மனநிலையிலிருந்து வெளியேவந்தால் தான் போரில் வெற்றிபெறலாம் என்று சிங்களப்படைக்கு ஆலோசனையும் கூறியுள்ளார்.

குறித்த இடங்களில் நிலைகொண்டபடி, படையினர் பங்கருக்குள் இருந்து தற்காப்பு போரைமட்டும் நடாத்தும் இராணுவ மூலோபாயத்திற்கு அமைய படையினர் போரிடுகின்றனர் என்ற கல்கத்தின் அவதானிப்பு தவறானது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய ரிவிரச நடவடிக்கையிலிருந்து- இன்றைய ஜயசிக்குறுய் வரை - சிங்களப்படையினர் நகர்ந்து, நிலங்களை விழுங்கும் வலிந்ததாக்குதல் போர் முறையிலேயே நம்பிக்கை வைத்து - நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

ஆனால், திட்டத்தின்படி தொடர்ந்து நகரமுடியாமல் ஒரே இடத்தில் பலகாலம் குந்தியிருப்பது படையினரின் பங்கர் மனநிலையினால் அல்ல. புலிகளின் எதிர்த்தாக்குதல் வீரியத்தினால் படையினர் முடக்கப்பட்டு - தற்காப்பு போரில் ஈடுபடும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் என்பதே உண்மையாகும்.

- எல்லாளன் -

ஜெனரல் கல்கத் கூறுவதுபோல் கிளிநொச்சிப் படையினர் பங்கருக்குள் இருந்துகொண்டு புலிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கவில்லை. மாறாக முன்னோக்கி நகர்ந்து நிலம் பிடித்துவிட சதா முயன்றுகொண்டேயிருந்தனர். நகர்வு முயற்சிகளின் போதுமட்டும் படையினர் இழந்த ஆட்தொகையை அறிந்தால், நகர்வுமுயற்சி கிளிநொச்சிப்படையினர்க்கு ஏற்படுத்திய நாசம் தெரியவரும்.

சத்ஜய என்ற பெயரில் கிளிநொச்சியைப்பிடிக்க நகர்ந்து - 700 பேரை இழந்து நிலத்தைப்பிடித்திருந்தனர். பின்னர்,

→

புலிகளின் தாக்குதல்களில் இழந்த கிளிநொச்சித்தளத்தின் பகுதியை மீண்டும் கைப்பற்ற இரண்டு பாரிய முயற்சிகள் உட்பட பல தடவைகள் படையினர் முயன்று – தோற்றிருந்தனர். இந்த வலிந்ததாக்குதல் முயற்சிகளில் படையினர் சுமார் 600 படையினரை பலிகொடுத்து – ஆயிரத்திற்கும் மேற்பட்டோரை காயக்காரர்களாகவும் பெற்று –இறகு சிதைந்த கழுகுபோல முடங்கிக்கிடந்தபோதே கிளிநொச்சிப்படைத்தளத்தின் உயிரை ஓயாத அலைகள் – 02 பிடுங்கி எடுத்தது.

பங்கர் மனநிலை என்று இன்று கல்கத் சொன்ன கருத்தை, மூன்றுவருடங்களுக்குமுன் தனது படையினரை விழித்து ரத்வத்தவும் கூறியிருந்தார். ஐ. தே. கட்சியின் ஆட்சியில் பங்கர்களுக்குள் முடங்கிக்கிடந்த படையினரை வெளியே எடுத்து வலிந்த தாக்குதல்களை நடாத்த – தான் நடவடிக்கை எடுத்துள்ளதாக சொல்லியிருந்தார்.

இப்படியான வலிந்ததாக்குதல் மனநிலையுடன் இருந்த சிங்களப்படையினரை பங்கர் மனநிலையுடன் உள்ளனர் என்று கல்கத் கூறியிருப்பது சரியான கருத்தாக இருக்கமுடியாது. இந்தப் பிழையான இராணுவ அபிப்பிராயம், வடபுலத்தின் இராணுவ யதார்த்தத்தை உணரவிடாமல் தடுக்கும் கைங்கரியத்தையும் செய்யலாம்.

அதாவது, கிளிநொச்சி தோல்விக்கு படையினரின் இயலாமையோ அல்லது புலிகளின் போர்த்திறனோ காரணமில்லை, மாறாக நகராது நிலையாக நிற்றல் என்ற தவறான மூலோபாயமே காரணம் என்ற பிழையான கருத்தை கல்கத் தெரிந்தோ – தெரியாமலோ பரப்ப முனைகின்றார்.

உண்மை நிலை என்னவென்றால், வன்னிச்சமர் அரங்கில் வலிந்ததாக்குதல்களை நடாத்தி நிலம்பிடிக்க முடியாமலும் பிடித்த நிலத்தை தற்காப்பு போர்முறை மூலம் தக்கவைத்திருப்பதிலும் பாரிய பிரச்சனைகளை சிங்களப்படை சந்திக்கத் தொடங்கிவிட்டது என்பதே கிளிநொச்சி தள அழிப்பு விடுக்கின்ற இராணுவச் செய்தி ஆகும்.

கிளிநொச்சியை படையினர் இழந்தது தொடர்பாக கல்கத் கூறிய மேலும் சில இராணுவ அபிப்பிராயங்கள் - வன்னிச் சமரரங்கின் களநிலைமைகள் பற்றிய விடயத்தில் – அவர் பூச்சியமாகவே இருக்கின்றார் என்பதையே பிரதிபலிக்கின்றது.

ஜெனரல் கல்கத் கூறுகின்றார் – படைத்தளங்களுக்குவெளியே சுமார் 5 அல்லது 10 கி. மீ. தூர சுற்றுவட்டத்தில் படையினர் தொடர்ச்சியான ரோந்துகளை நடாத்தி எதிரியை தூரத்தில் வைத்திருக்க வேண்டும் என்பது எல்லா நாட்டு இராணுவங்களும் அறிந்ததே இந்த பொதுவிதியை கிளிநொச்சிப்படையினர் நடைமுறைப்படுத்தியிருந்தனரா என்று – கல்கத் அவர்கள் - எதிர்க்கேள்வி ஒன்றையும் பத்திரிகையாளரிடம் தொடுத்திருந்தார்.

இத்துடன், சண்டைகள் படைமுகாங்களுக்கு வெளியேதான் நடைபெற வேண்டும், உள்ளே அல்ல என்றும் அபிப்பிராயம் கூறியிருந்தார்.

இதுமட்டுமல்ல, புலிகள் தங்களது அணிகளை மீளஒன்றுசேர்க்க (Regroup) விடாமலும் – பலப்படுத்திக்கொள்ள (Consolidate) விடாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தக் கருத்துக்கள் போரியல் புத்தகங்களில் இருக்கின்ற இராணுவச் சித்தாந்தங்கள் என்பது வேறுவிடயம். ஆனால், இவற்றை நடைமுறைப் படுத்தமுடியாத கையறு நிலைக்குள் சிங்களப்படையினர் உள்ளனர் என்ற உண்மை நிலையை கல்கத் அறிந்திருக்கவில்லைப் போலும்.

படைமுகாங்களுக்கு வெளியேதான் சண்டை நடைபெறவேண்டும், உள்ளே அல்ல என்ற அவரது கருத்து சிங்கள - தமிழ் மக்கள் அனைவருக்கும் நகைப்பிற்கிடமான கூற்றாகவே இருக்கும்.

அதேபோல, தங்களது அணிகளை, புலிகள் மீள ஒன்றிணைக்கவோ– பலப்படுத்தவோ விடக்கூடாது என்ற உளுத்துப்போன பழைய பல்லவியை பிரபல இந்திய ஜெனரல் கல்கத்தும் உச்சரித்திருப்பது பலருக்கு வியப்பை ஏற்படுத்தும்.

இதேவேளை, தனது இராணுவ அபிப்பிராயங்களுக்கு வலுச்சேர்ப்பதற்காகவோ! என்னவோ! தனது தலைமையிலான ஐ. பி. கே. எவ். இனர் ஈழத்தில் தமது தந்திரோபாயத்தை சிங்களப் படையினர் தயாரிக்க வேண்டும் என்று சிறிலங்கா படைத்தலைமைக்கு – கல்கத் ஆலோசனை கூறினாலும், செவ்வியில் அவர் கூறியுள்ள சில கருத்துகளை பார்க்கும்போது, அவருக்கு களயதார்த்தமும் சரியாகப் புரியவில்லை - இராணுவ நிலைமைகளும் தெளிவாகத் தெரியவில்லை என்றே கூறலாம்.

புலிகள் இயக்கத்திற்கு எதிராக, தனது தலைமையிலான இந்தியப்படை யுத்தம் புரிந்தபோது உலங்குவானூர்திகள் மூலம் கொமாண்டோ படையினரை தரையிறக்கி வெற்றிகரமான தாக்குதல்களை தான் நடத்தியதாக - கல்கத் கூறியுள்ளார்.

ஆனால், யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் உலங்குவானூர்திகள் மூலம் நடு இரவில் இறக்கப்பட்ட 40 சீக்கிய கொமாண்டோக்களில் ஒருவரைத்தவிர மிகுதி அனைவரும் விடிந்த பின் பலியாகியிருந்தனர். அதுபோல 'செக்மேற்' நடவடிக்கையின் ஒரு கட்டத்தின போது ஜெனரல் கல்கத்தின் கட்டளைப் பீடமாகச் செயற்பட்ட நிதிகைக்குள முகாமிற்குள் புகுந்த புலி அணியொன்று, அவரின் கண்முன்னாலேயே ஒரு உலங்குவானூர்தியை அழித்து முகாமை உலுக்கிவிட்டு வந்திருந்தது.



புலி தோள்மீது சுடுகுழல் - இனி பகைவீடு எரிதழல்

சாதித்த 'சாதனைகள்' சிலவற்றை அவர் அந்த செவ்வியில் கூறமுற்பட்டுள்ளார்.

பங்கர் மனநிலை நோய் தனது ஜவான்களை அணுகவிடாது தடுக்க தான் செய்த வேலைகளை, அவர் செவ்வியில் அடுக்கியுள்ளார். அங்கே (ஈழத்தில்) இந்தியப் படையினர் இருந்தபோது மூன்றில் ஒரு பகுதி ஜவான்கள் நிரந்தர நிலைகளில் தரித்துநிற்க மிகுதி மூன்றில் இரண்டு பகுதி ஜவான்கள் வலிந்த தாக்குதல்களுக்காக வெளியே உலாவினர் என்று பெருமைப் பட்டுக்கொண்டுள்ளார். சிங்களப்படையினரும் இவ்வாறு செய்தால் என்ன என்று, அவர் கேள்வி கேட்பது போலுள்ளது. பத்துவருடங்களுக்கு முன்பிருந்த இராணுவநிலையை இப்போது சுட்டிக்காட்டி அதன்பிரகாரம் நடக்கலாமே! என்று கூறமுயல்வது பொருத்தமற்ற கூற்றாகும்

புலிகளின் நகர்வுத்திறனுக்கும் – செயல் வேகத்திற்கும் ஈடுகொடுக்கக்கூடிய வகை

இதேசமயம், புலிகளின் இருப்பிடங்களை தாக்கவெனவும் – தமது நகர்வை வேகப்படுத்தவெனவும் உலங்குவானூர்திகள் மூலம் கொமாண்டோக்களை அனுப்பியிருந்தாலும் அவற்றினால் குறிப்பிடக்கூடிய எதையும் சாதித்திருக்க முடியவில்லை என்பதே உண்மையாகும்.

இந்த உலங்குவானூர்தித் தரையிறக்கக் கதைகளைச் சொல்வதன் மூலம் சிங்களப்படைத் தலைமையும் இத்தகைய வான்வழித்தரையிறக்கத்தை செய்து பயன்பெறலாம் என்று – கல்கத் அவர்கள் மறைமுகமாக ஆலோசனை கூறுகின்றார் போலுள்ளது.

பரந்தனிலிருந்து கைக்கெட்டிய தூரத்தில் – கிளிநொச்சியில் – பல நூற்றுக்கணக்கில் படையினர் உயிருக்காகப் போராடிய போது, ஒரு உலங்குவானூர்தியைக் கூட உதவிக்கு அனுப்ப முடியாத அவலநிலையிலிருந்த சிங்களப் படைத் தலைமைக்கு – கல்கத்தின் ஆலோசனை எரிச்சலையே வரவழைத்திருக்கும். ○


www.eelamview.com

ஜெயசிக்குறு தீர்- 1, 2, 3 நடவடிக்கைகள் புலிகள் இயக்கத்தின் போரிடும் திறனை நசுக்கிவிட்டன என்பது, சிங்கள அரசி னது கருத்து மட்டுமல்ல; பெரும்பாலான உலக இராணுவ - அரசியல் ஆய்வாளர் களும் அவ்வாறே கருதினர்.

பாரிய முகாம் தகர்ப்புகளை புலிக ளால் இனிமேல் நடாத்த முடியாது என் றும், அரசுக்கு தலையிடியைக் கொடுக் கும் வகையில சிறு சிறு தாக்குதல் களை மட்டுமே புலிகளால் நடாத்த முடி யும் என்றும், அவர்கள் கருத்துக் கூறி யிருந்தனர்.

# புரியாத புதிர்

சுருக்கமாகச் சொன்னால் தீவிரம் குறைந்த ஒரு போர்முறையை ( Low intensive Warfare ) மேற்கொள்ளவே புலி களின் தற்போதைய இராணுவ பலம் இடங்கொடுக்கும் என்று, பெரும்பாலான ஆய்வாளர்கள் ஆருடம் கூறியிருந்தனர்.

ஆனால், இத்தகைய படையியல் கணிப்பீடுகள் மற்றும் இராணுவ அபிப் பிராயங்கள் அனைத்தையும் ஓயாத அலைகள் மூழ்கடித்துவிட்டது.

தென்மராட்சி - வடமராட்சியிலிருந்து போரிடாது பின்வாங்கிய புலிகளின் செயலைப் புரிந்துகொள்ள முடியாது திண்டாடிய இராணுவ உலகம், முல் லைத்தீவு படைத்தளத்தைப் புலிகள் கைப் பற்றிவிட்டனர் என்ற செய்தி வெளியா னவுடனும், புலிகள் இயக்கத்தைப் புரிந் துகொள்ள முடியாது விழித்தனர்.

( இப்போது, கிளிநொச்சிப்படைத்தளத்தை புலிகள் கைப்பற்றிவிட்டனர் என்ற செய்தி வெளியாகிய பின்னரும் ஆய்வாளர்கள் வியக்கின்றனர் .)

மொத்தத்தில், இராணுவ உலகிற்கு அன்றும், இன்றும் புலிகள் இயக்கம் ஒரு புரியாத புதிராகவே உள்ளது.

தலைவர் பிரபாகரனின் இராணுவச் செயற்பாடுகளில் உள்ள தனித்தன்மை களே, புலிகள் இயக்கத்திற்கு இத்தகைய புதிர்த் தன்மைகளைக் கொடுத்துள்ளன.

புலிகள் இயக்கம் பற்றிய இராணுவ மதிப்பீடுகளை சமகால ஆய்வாளர்களால் சரியாகக் கணிக்க முடியாதுள்ளதற்குப் பிரதான காரணம், அந்த ஆய்வாளர்கள் வைத்திருக்கும் இராணுவ அளவுகோல்கள் தான்.

இந்த அளவுகோல்கள், உலகின் இரா ணுவ சிந்தனையாளர்கள் மற்றும் புகழ் பூத்த படைத் தளபதிகள் ஆகியோரின் போதனைகள், அனுபவங்கள் என்பவற் றால் ஆக்கப்பட்டுள்ளன.

ஆனால், இதற்கும் அப்பால், தலைவர் பிரபாகரனின் இராணுவ சிந்தனைகளும், செயற்பாடுகளும், பெரும்பாலும் தனித் தன்மை வாய்ந்தவைகளாக அமைந்துள் ளன. இது காரணமாக, தாம் வைத்தி ருக்கும் இராணுவ அளவு கோல்களைப் பயன்படுத்திப் பிரபாகரனின் போர்க்க லையைச் சரியாக அளந்து - கணிக்க முடியாது வல்லுநர்கள் திண்டாடுகின்ற னர்.

இதனால்தான், புலிகள் இயக்கம்பற்றி இராணுவ விமர்சகர்கள் கூறும் கருத் துக்கள் - கணிப்புக்களில் அடிக்கடி பெருந் தவறுகள் ஏற்பட்டுவிடுகின்றன.



என்றைக்குத் தலைவர் பிரபாகரன் தனது போர்க்கலை முறைகளை விரிவாக விளக்கி உலகிற்கு வழங்குகின்றாரோ, அன்றைக்குத்தான் புலிகள் இயக்கம் பற்றிய புதிரும் விடுபடும்! ○

---

சண்டேரைம்ஸ் ( ஒக்டோபர் 11 ) பத்திரி கையில் வெளிவந்த ஒரு அங்கதச் சித்திரம் இது. பிந்து பிந்துவின் தந்தை பேர்சி மற்றும் தாத்தா ஆகியோர் கதை மாந்தர்கள்.

" போர் எப்படிப் போகுது தாத்தா"
பிந்து கேட்டான்.
" எந்தப் போர் " பிந்துவின் அப்பா பேர்சி திருப்பிக் கேட்டார்.

" ஏன்! வட - கிழக்கு போர்தான் தாத்தா."

"அங்கே போர் பெரிதாக நடக்கவில்லையே பிந்து!"

"ஆனால், தாத்தா, அங்கே நூற்றுக்கணக்கில் இராணுவம் பலியாகிவிட்டது என்று சிலர் கதைக்கிறார்கள் தாத்தா."
அது புலிப்பிரச்சாரம் பிந்து

அப்படியென்றால் அந்த 4 வீதப்போரும் விரைவில் முடிந்து விடும்தானே!

ஆனால், கிளிநொச்சியின் கட்டுப்பாட்டை படையினர் இழந்தபோது இன்னொரு 30 வீதத்தை படையினர் இழந்துவிட்டனர் என்று சிலர் வாதிடுகின்றனர்.

"அதுதான் எதிரியின் பிரச்சாரம் பிந்து" பேர்சி எச்சரித்தார்.

அப்படியென்றால் வைத்தியசாலைகள் காயக்காரர்களால் நிரம்பிவழிகின்றனவே! அது ஏன்? பிந்து அறியவிரும்பினான்.

அது ஜெனரல் பெற்ற ஆகப்பிந்திய வெற்றியான மாங்குளம் சண்டையில் ஏற்பட்டிருக்கவேண்டும்.

ஏன் பிந்து! சிங்கள புதுவருடப்பிறப்பிற்கு முன்னர் "போரை முடிப்பேன் என்று ஜெனரல் உறுதியளித்தது உனக்கு நினைவில்லையா!"

அதன்பிறகு, இந்தவருட சுதந்திரத்திற்கு முன் பிரபாகரனுடன் கைகுலுக்குவேன் என்று ஜெனரல் உறுதியளித்திருந்தார்.

"உண்மைதான் அப்படித்தான் சொல்லியிருந்தார். ஆனால் ஒன்றுமே நிறைவேற்றப்படவில்லை பிந்து."

# 'ஜெனரல்' தணத்து



அப்படியென்று எப்படி உறுதியாகச் சொல்லுவியள் தாத்தா.

ஏன் பிந்து! 90 வீதப்போர் முடிஞ்சது என்று ஜெனரல் சொல்லிப்போட்டார்.

"ஆனால் தாத்தா..." பிந்து தயங்கினான்.

"அதில சந்தேகப்பட ஒன்றுமில்லை பிந்து" பேர்சி சொன்னார்.

96 வீதப்போர் முடிந்துவிட்டது என்று ஜெனரல் சொன்னால் அதன் அர்த்தம் 4வீதப்போர் மட்டும் மிஞ்சியிருக்கின்றது என்பதுதானே!

தணிக்கை பற்றி...

அது எதிரியின் பிரச்சாரத்திலிருந்து உன்னைப் பாதுகாக்கவே உள்ளது.

"அப்படியானால் எல்லாம் தீர்க்கப்பட்டுவிட்டதா"

" 4 வீதம் மட்டுமே உள்ளது "
பேர்சி நம்பிக்கையூட்டினார்.

4 வீதத்தை எப்பொழுது முடிப்போம்.

ஜெனரல் விரும்புகின்றபொழுது.

ஏன் அப்படிச் சொல்கின்றாய்.

மிச்சமுள்ள 4 வீதப்போர் என்பது நடந்துமுடிய நான்கு கிழமைகள்... நான்கு மாதங்கள்... அல்லது நான்கு வருடங்கள் செல்லலாம் பிந்து.

" கணிதத்தில் ஜெனரல், கெட்டிக்காரராக இருக்கின்றார்" என்று பிந்து சொன்னான்.

பேர்சி மறுக்கவில்லை. ○



www.eelamview.com